©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 14.40 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 25] சென்னை, புதன்கிழமை, ஜூலை 6, 2011
ஆனி 21, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

---

**2011–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:–**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2011.**

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச்சட்டம்.

மேலும், இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:–

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச்சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கின்றார்.–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

**1.** (1) இந்த அவசரச் சட்டம், 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**தமிழ்நாடு சட்டம் 8/1971**

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,

(1) (b) எனும் கூறில், ''தோட்டப்பயிர்கள், செடிகள், பூச்சிகள், பயிர் நோய்கள் கட்டுப்பாடு, மலரியல் உள்ளடங்கலான தோட்டக்கலை, கால்நடை மருத்துவம் உள்ளடங்கலான கால்நடை பராமரிப்பு, பால் பண்ணை குறித்த அறிவியல், மீன் வளம்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, வயல் பயிர்கள், செடிகள், பூச்சிகள், பயிர் நோய்கள் கட்டுப்பாடு'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (i) எனும் கூறில் ''கால்நடை பராமரிப்பு, மீன் வளம்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் வரம்புரையில், (b) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும்,

அதாவது:—

(i) உயர்நீதிமன்ற நீதிபதியொருவராக; அல்லது

(ii) அரசுத் தலைமைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத அரசின் அலுவலரொருவராக: அல்லது

(iii) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகம் ஏதொன்றின் துணைவேந்தரொருவராக இருக்கிற அல்லது இருந்து வருகிற அத்தகைய நபரால், அரசினால் அவர் நியமிக்கப்படக்கூடியவறான நிலையில், நடத்தப்படவேண்டிய உரிய துணைவேந்தரின் பதவியிலிருந்து அகற்றப்படுவதற்கு எதிராகத் தமது முறையீட்டைச் செய்துகொள்வதற்கு வாய்ப்பொன்று அந்தத் துணைவேந்தருக்கு வழங்கப்பட்ட நிலையில், அந்த விசாரணைக்குப் பின்னர், வேந்தரால், வழங்கப்பட்ட ஆணையொன்றினால் தவிர, இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதில் வேண்டுமென்றே தவறியுள்ளார் அல்லது நிறைவேற்ற மறுத்துள்ளார் அல்லது அவர்பால் உற்றமைந்துள்ள அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என்ற காரணத்தினால் துணைவேந்தர் அவர்தம் பதவியிலிருந்து அகற்றப்படுதல் கூடாது.

18–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ''வகை II பிற உறுப்பினர்கள்'' எனும் தலைப்பின் கீழ், (i) எனும் கூறில், ''தோட்டக்கலை'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

23–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் (e) எனும் கூறில் ''சிறப்புப் பேராசிரியர்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''இணைப் பேராசிரியர்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

24–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''விலங்கின அறிவியல், அக மனை அறிவியல், காட்டு வளம், மீன்வளம்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''அக மனை அறிவியல், காட்டு வளம்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

32–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(2–A) வேளாண்மைத்துறையின் அரசுச் செயலாளரோ அல்லது நிதித்துறையின் அரசுச் செயலாளரோ காரணம் எதற்காகவும் நிதிக்குழுவின் கூட்டங்களில் கலந்துக்கொள்ள இயலாது இருக்கும் நேர்வில், அவர் தன்னுடைய துறையின் அரசின் இணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரையும் கூட்டங்களில் அவர் சார்பாக கலந்து கொள்வதற்கு அனுப்பலாம். அவ்வாறு அனுப்பப்பட்ட அலுவலர் கூட்டங்களின் கலந்துரையாடல்களில் பங்கு பெறுவதற்கான உரிமையையும் வாக்களிப்பதற்கான உரிமையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**8.** முதன்மைச் சட்டத்திற்கான இணைப்புப் பட்டியலுக்குப் பதிலாகப் பின்வரும் இணைப்புப் பட்டியலானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— **இணைப்புப் பட்டியலுக்குப் பதிலாக அமைத்தல்.**

**"இணைப்புப் பட்டியல்.**

**[1(3), 53(1) ஆகிய பிரிவுகளை காணவும்]**

(1) வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர்.'

(2) வேளாண்மைக் கல்லூரி, மதுரை.

(3) கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்குள் அமைந்த அனைத்து ஆராய்ச்சி மற்றும் கல்விப் பிரிவுகள்.

(4) மதுரை வேளாண்மைக் கல்லூரிக்குள் அமைந்த அனைத்து ஆராய்ச்சி மற்றும் கல்விப் பிரிவுகள்.

(5) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்.

(6) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், ஆளியார் நகர்.

(7) வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கிள்ளிக்குளம்.

(8) வேளாண்மைப் பொறியியல் கல்லூரி, குமுலூர்.

(9) வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மேட்டுப்பாளையம்.

(10) வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நாவலூர் குட்டப்பட்டு, திருச்சி.

(11) தமிழ்நாடு அரிசி ஆராய்ச்சி நிறுவனம், ஆடுதுறை.

(12) அரிசி ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம்.

(13) வட்டார ஆராய்ச்சி நிலையம், கோவிலங்குளம், அருப்புக்கோட்டை.

(14) கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்.

(15) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி.

(16) கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலத்தூர்.

(17) வட்டார ஆராய்ச்சி நிலையம், பையூர்.

(18) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி.

(19) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை.

(20) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், இராமநாதபுரம்.

(21) கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி.

(22) க்ருஷி விக்ஞான் கேந்திரம், சிறுகமணி.

(23) பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிபுத்தூர்.

(24) மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிறுவனம், தஞ்சாவூர்.

(25) எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்.

(26) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம்.

(27) அரிசி ஆராய்ச்சி நிலையம், திரூர்.

(28) தேசிய பருப்பு வகைகள் ஆராய்ச்சி மையம், வம்பன்.

(29) வட்டார ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்.

(30) க்ருஷி விக்ஞான் கேந்திரம், விருத்தாசலம்.

(31) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம்".

2011–ஆம் ஆண்டு, பிப்ரவரித்
திங்கள் 28–ஆம் நாள்.

**சுர்ஜித் சிங் பர்னாலா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

தோட்டக்கலைக்காகவும் அது தொடர்பான அறிவியலுக்காகவும் தனிப்பட்ட முறையில் தமிழ்நாடு தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குவதற்கு அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பிப்பதெனக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன நிலையின் விளைவாக, 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 8/1971) திருத்தப்படவேண்டியது தேவையாகிறது. எனவே அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. இந்த அவசரச் சட்டமானது மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**2011–ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:–**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2011.**

தமிழ்நாடு மாநிலத்தில், தோட்டக்கலையின் வளர்ச்சிக்காகவும், தோட்டக்கலை மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல் துறைகளில் கல்வி பெறுவதை மற்றும் அதில் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்திவருவதை மேலும் மேம்படுத்துவதற்காகவும் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியமைப்பதற்கு வகை செய்வதற்கானதோர் அவசரச்சட்டம்.

இம்மாநிலச் சட்டமன்றப்பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:–

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கிறார்:–

**அத்தியாயம்–I**

**முன்னுரை.**

குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்த அவசரச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தோட்டக்கலைப் பல்கலைக்கழக அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவிநிற்கும்,

(3) இது இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தோட்டக்கலைக் கல்லூரிகளுக்கும் மற்றும் கல்வி நிலையங்களுக்கும் பொருந்தும்.

(4) இது, அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்த அவசரச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி:–

(a) "இணைக்கப்பெற்ற கல்லூரி" என்றால், இப்பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பெற்றதும் இப்பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகளுக்கான, பட்டயப்படிப்புகளுக்கான அல்லது பிற கல்விச் சிறப்புகளுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதற்காகக் குறித்தகாலப் படிப்புப்பிரிவுகளுக்கு வகைசெய்வதுமான கல்லூரி எதுவும் என்று பொருள்படும்;

(b) "குறிக்கப்பட்ட தேதி" என்றால், 1–ஆம் பிரிவின் (4)–ஆம் உட்பிரிவின்படி அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதி என்று பொருள் படும்;

(c) "குழுமம்" என்றால், இப்பல்கலைக்கழகத்தின் நிருவாகக் குழுமம் என்று பொருள்படும்;

(d) "கல்லூரி" என்றால், தோட்டக்கலையின் கல்வி கற்பிப்பதற்கு அளிப்பதற்கு அல்லது தோட்டக்கலையில் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருவதற்கு வகை செய்கின்ற அல்லது அவற்றில் விரிவாக்கக் கல்விக்கு வகை செய்கின்ற கல்லூரி அல்லது கல்விநிலையம் எதுவும் என்று பொருள்படும்;

(e) "மூலாதாரக் கல்லூரி" என்றால், கோயம்புத்தூரிலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மற்றும் பெரியகுளத்திலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்று பொருள்படுவதோடு, அத்தகையதென அவ்வப்போது குழுமத்தினால் விளம்பப்படக்கூடிய அத்தகைய பிற கல்லூரிகளையும் உள்ளடக்கும்;

(f) ''நேரிணையான பல்கலைக்கழகம்'' என்றால், கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்று பொருள்படும்;

(g) ''முதன்மையர்'' என்றால் பல்கலைக்கழகத்தின் தலைமையகத்தில் உள்ள முதன்மையர் (கல்வி) அல்லது கல்லூரி ஒவ்வொன்றின் முதன்மையர் என்று பொருள்படும்;

(h) ''இயக்குநர்'' என்றால், ஆராய்ச்சி இயக்குநர் அல்லது விரிவாக்கக் கல்வி இயக்குநர் அல்லது பயிர் மற்றும் உயிர் அறிவியல் இயக்குநர் அல்லது பன்னாட்டுத் திட்ட இயக்குநர் அல்லது பயிர் பாதுகாப்பு இயக்குநர் அல்லது உயிரி–வள ஆதாரங்கள் மற்றும் அறுவடைக்கு பிந்திய பொறியியல் இயக்குநர் அல்லது வேளாண் வணிக வளர்ச்சி இயக்குநர் எனப் பொருள்படும்;

(i) ''விரிவாக்கக் கல்வி'' என்றால், விவசாயிகளுக்கும், வீட்டுப்பயன் பாட்டாளர்களுக்கும், தோட்டக்கலையைப் பயன்படுத்தும் மேம்படுத்தப்பட்ட தோட்டக்கலை நடைமுறைகளாலும், தோட்டக்கலை மற்றும் தோட்டக்கலை உற்பத்தி தொடர்புடைய அறிவியல் தொழில் நுட்பத்தின் பல்வேறு பிரிவுகளிலும் பிற குழுக்களுக்குப் பயிற்சியளிப்பது மற்றும் சந்தைப்படுத்துவதுடன் தொடர்புடைய கல்விசார் நடவடிக்கைகள் என்றும் பொருள்படும்; மேலும் புதிய தொழில் நுணுக்கங்களையும் கண்டுபிடிப்புகளையும், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வனவியல் வேளாண்மை சந்தைப்படுத்தும் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, விதைச் சான்றிடும் துறை போன்ற அரசுத் துறைகளின் மூலமாக பண்ணைகளுக்கும், பண்ணையகங்களுக்கும் கொண்டு சென்று காட்டுவதற்கான செய்முறைப் பயிற்சியையும் உள்ளடக்கும்;

(j) ''புலம்'' என்றால், இப்பல்கலைக்கழகத்தின் புலமொன்று என்று பொருள்படும்;

(k) ''அரசு'' என்றால், மாநில அரசு என்று பொருள்படும்;

(l) ''தோட்டக்கலை'' என்றால், அலங்காரத் தோட்டக்கலை மற்றும் இயற்கை வனப்பு உள்ளடங்கலாக, பழப்பயிர்கள், காய்கறிப்பயிர்கள், நறுமணப் பயிர்கள், மலைத்தோட்டப் பயிர்கள், மருந்து மற்றும் மணமூட்டிய பயிர்கள், மலர் பயிர்கள், ஆகியவற்றைப் பயிரிடுதல், பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் குறித்த அறிவியல் மற்றும் கலை என்று பொருள்படும்;

(m) ''விடுதி'' என்றால் இப்பல்கலைக்கழகக் கல்லூரியால் அதன் ஒரு பகுதியாக அல்லது தனித்து, பேணிவரப்படுகின்ற அல்லது ஏற்பிசைவளிக்கப்பட்டிருக்கிற, இப்பல்கலைக்கழகத்து மாணவர்களுக்கான ஒரு குடியிருப்புப் பிரிவு என்று பொருள்படும்;

(n) ''வகுத்துரைக்கப்பட்டது'' என்றால் இந்த அவசரச் சட்டத்தின்படி செய்யப்படும் நிலைமுறை விதிகளினாலோ ஒழுங்குமுறை விதிகளினாலோ வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(o) ''ஒழுங்குமுறை விதிகள்'' என்பதும் ''நிலைமுறை விதிகள்'' என்பதும், முறையே, இந்த அவசரச் சட்டத்தின்படி செய்யப்படும் ஒழுங்குமுறை விதிகள் என்றும் நிலைமுறை விதிகள் என்றும் பொருள்படும்;

(p) ''இணைப்புப்பட்டியல்'' என்றால், இந்த அவசரச் சட்டத்துடன் சேர்க்கப்பட்ட இணைப்புப்பட்டியல் என்று பொருள்படும்;

(q) ''மாநிலம்'' என்றால் தமிழ்நாடு மாநிலம் எனப் பொருள்படும்;

(r) ''பல்கலைக்கழகம்'' என்றால் **3**–ஆம் பிரிவின்படி நிறுவப்பட்டுள்ள, தமிழ்நாடு தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் என்று பொருள்படும்.

## அத்தியாயம்–II.

## பல்கலைக்கழகம்.

**3.** (1) தோட்டக்கலை வளர்ச்சிக்காகவும், தோட்டக்கலை மற்றும் தொடர்புடைய அறிவியல்களில் கல்வி பெறுவதையும் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்திவருவதையும் மேலும் மேம்படுத்துவதற்காகவும் தமிழ்நாடு தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் பல்கலைக்கழகமொன்று குறிக்கப்பட்ட தேதியன்றும் அதுமுதற்கொண்டும் நிறுவப்படும். பல்கலைக் கழகம் நிறுவப்படுதல்.

(2) இப்பல்கலைக்கழகம் ஒரு கூட்டமைப்பாக இருக்கும் என்பதோடு, நிலையான தொடருரிமையும் தனித்த இலச்சினையும் பெற்றிருக்கும்; மற்றும் மேற்சொன்ன பெயரில் வழக்கிடுதலும் வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) இப்பல்கலைக்கழகத்தின் முதன்மையகம் கிருஷ்ணகிரி நகரத்தின் எல்லைகளைச் சுற்றியுள்ள ஐம்பது கிலோ மீட்டர் சுற்றளவு உள்ள இடம் எதிலும் அமைந்திருக்கும்.

**4.** இப் பல்கலைக்கழகம் பின்வரும் நோக்கங்களைக் கொண்டிருக்கும், அதாவது:– இப்பல்கலைக் கழகத்தின் நோக்கங்கள்.

(a) இப்பல்கலைக்கழகம் தீர்மானிக்க கூடியவாறு தோட்டக்கலை மற்றும் அதன் தொடர்புடைய அறிவியல்களின் வெவ்வேறு பிரிவுகளில் கல்வியைக் கற்பித்தல்;

(b) தோட்டக்கலை மற்றும் அதன் தொடர்புடைய அறிவியல்களில் கல்வி பெறுவதையும் அதில் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதையும் மேலும் மேம்படுத்துதல்; மற்றும்

(c) தொடர்புடைய அரசுத் துறைகளுடன் ஒத்துழைத்து ஊரக மக்களுக்கு எட்டுகின்ற வகையில் அத்தகைய அறிவியல்களை விரிவுபடுத்தும் பணியை மேற்கொள்ளுதல்.

**5.** இப்பல்கலைக்கழகத்தின் அதிகாரங்களும் அலுவல்களும் பின்வருமாறு இருக்கும், அவையாவன:– இப்பல்கலைக் கழகத்தின் அதிகாரங்களும் அலுவல்களும்.

(a) தோட்டக்கலை மற்றும் தொடர்புடைய அறிவியல்களில் கற்பித்தல், பயிற்சி ஆகியவற்றுக்கு வகைசெய்தல்;

(b) தோட்டக்கலையில் கல்வி கற்பித்தல், பயிற்சி ஆகியவற்றுக்கும், தோட்டக்கலை மற்றும் தொடர்புடைய அறிவியல்களில் அறிவினைப் பரப்புவதற்கும் வகை செய்தல்;

(c) ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளையும் தொழில் நுட்பத் தகவல்களையும் விரிவாக்கக் கல்வியின் மூலமாகப் பரப்புவதற்கு வகைசெய்தல்;

(d) தோட்டக்கலை மற்றும் அதன் தொடர்புடைய அறிவியல்களில் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகளை ஏற்படுத்துதல்;

(e) (i) வகுத்துரைக்கப்பட்டுள்ள குறித்த காலப் படிப்புப்பிரிவினைத் தொடர்ந்து படித்து முடித்தவர்களுக்கு; அல்லது

(ii) வகுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்படி இப்பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்துள்ளவர்களுக்குத் தேர்வுகள் நடத்தி, பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குதல்;

(f) வகுத்துரைக்கப்பட்ட முறையிலும் வகுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் படியும் மதிப்புறு பட்டங்களையோ பிற சிறப்புகளையோ வழங்குதல்;

(g) களப்பணியாளர்கள், விவசாயிகள், இப்பல்கலைக்கழகத்தில் முறையான மாணவர்களாகப் பதிவு செய்யப்பெறாத பிற நபர்கள் ஆகியோருக்கு விரிவுரைகள் அளிக்கப்படுவதற்கும் கல்வி கற்பிக்கப்படுவதற்கும் வகை செய்தல், மற்றும் தேவையாயின் அவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதல்;

(h) தான் தீர்மானிக்கக் கூடிய முறையிலும் நோக்கங்களுக்காகவும் பிற பல்கலைக்கழகங்களுடனும் அதிகார அமைப்புகளுடனும் ஒத்துழைத்தல்;

(i) தோட்டக்கலை மற்றும் அதன் தொடர்புடைய அறிவியல்கள் தொடர்பான கல்லூரிகளை நிறுவிப் பேணிவருதல்;

(j) வகுத்துரைக்கப்படும் நிபந்தனைகளின்படி கல்லூரிகளை இப்பல்கலைக்கழகத்தோடு இணைத்தலும் அவ்வாறு அக்கல்லூரிகளை இணைத்துக் கொண்டதை விலக்கிக் கொள்ளுதலும்;

(k) கல்வி கற்பித்தல், ஆராய்ச்சி செய்தல், விரிவாக்கக் கல்வியளித்தல் ஆகியவற்றிற்கான ஆராய்ச்சிக்கூடங்கள், நூலகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், அருங்காட்சியகங்கள், ஆகியவற்றை நிறுவிப் பேணிவருதல்;

(l) கல்வி கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கக்கல்வி ஆகியவற்றிற்கான பதவிகளை ஏற்படுத்தி அத்தகைய பதவிகளில் நபர்களை நியமனஞ்செய்தல்;

(m) நிருவாகப் பதவிகளையும் பிற பதவிகளையும் உருவாக்கி அத்தகைய பதவிகளில் நபர்களை நியமனஞ்செய்தல்;

(n) நிலை முறை விதிகளுக்கிணங்க ஆராய்ச்சி உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், பரிசுத் தொகைகள், ஆகியவற்றை ஏற்படுத்தி வழங்குதல்;

(o) பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாணவர் விடுதிகளையும் பல்கலைக்கழகப் பணியாளர்களுக்காக குடியிருப்பு இடவசதிகளையும் அமைத்தல், பேணி வருதல் மற்றும் அவற்றுக்கு ஏற்பிசைவளித்தல்;

(p) வகுத்துரைக்கப்படக்கூடிய கட்டணங்களையும் பிற தொகைகளையும் நிர்ணயித்தலும், கோரிப் பெறுதலும்;

(q) பல்கலைக்கழக மாணவர் விடுதிகளைக் கண்காணித்துக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருத்தல்; மற்றும் இப்பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே ஒழுங்கு நடத்தையை முறைப்படுத்துதல் மற்றும் அவர்களது உடல்நலத்தையும், நலனையும் வளர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்தல்;

(r) பிறபல்கலைக்கழகங்களுடனும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மன்றம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்புகள் ஆகியவற்றுடனும், கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வியிலும் பிற திட்டங்களிலும் இணைந்து செயல்படுதல்; மற்றும்

(s) மேற்சொன்ன அதிகாரங்களின் மற்றும் அலுவல்களின் விளைவானவையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையானவையாகவோ, விரும்பத்தக்கனவாகவோ இருக்கக்கூடிய அனைத்துச் செயல்களையும் செயற்பாடுகளையும் செய்தல்.

இப்பல்கலைக் கழகத்தில் சேர்த்துக் கொள்ளுதல்.

**6.** (1) இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் நிலை முறை விதிகளுக்கும் உட்பட்டு, இப்பல்கலைகழகத்தில் சேர்வதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு.

(2) (1)—ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும்,

(a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியோ, தரநிலையோ பெற்றிராத நபர் எவரையும் குறித்த காலப் படிப்புப் பிரிவு எதிலும் சேர்த்துக் கொள்ளுமாறோ;

(b) பட்டமொன்றோ, பட்டயமொன்றோ அல்லது பிற கல்விச் சிறப்போ வழங்கப்படுவதற்குத் தேவையான குறைந்தபட்சத் தரநிலைக்கும் கீழே கல்வித் தகுதியைப் பெற்றுள்ள மாணவர் எவரையும் இப்பல்கலைக்கழகப் பெயர்ப்பட்டியலில் தொடர்ந்து இருந்துவரச் செய்யுமாறோ;

(c) எந்த நபரின் அல்லது மாணவரின் நடத்தையானது, இப்பல்கலைக்கழகத்தின் நலனுக்கோ அல்லது பிற மாணவர்களில் மற்றும் பணியாளர்களின் உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்குமோ, கேடு விளைவிக்கத்தக்கதாகவுள்ளதோ அந்த நபர் எவரையும் சேர்த்துக் கொள்ளுமாறோ அல்லது அந்த மாணவர் எவரையும் தொடர்ந்து இருந்துவரச் செய்யுமாறோ; அல்லது

(d) வகுத்துரைக்கப்பட்டுள்ள அளவிற்கும் அதிகமான எண்ணிக்கையில் மாணவர்களைக் குறித்தகாலப் படிப்புப்பிரிவு எதிலும் சேர்த்துக்கொள்ளுமாறோ இப்பல்கலைக்கழகத்தைக் கோருதலாகாது.

**7.** (1) (a) பல்கலைக்கழகம், அதன் கட்டடங்கள், ஆய்வகங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள், பணிமனைகள் மற்றும் பிறசாதனங்களை; **ஆய்வும் விசாரணையும்.**

(b) பல்கலைக்கழகத்தால் பேணி வரப்படும் கல்விநிலையம், கல்லூரி அல்லது விடுதி எதனையும்;

(c) பல்கலைக்கழகத்தால் அல்லது அதன் கண்காணிப்பின் கீழ் நடத்தப்படும் கற்பித்தல் மற்றும் பிற பணியை;

(d) பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தேர்வு எதனையும் நடத்தும்முறையை அரசு,

தன்னால் பணிக்கப்படும் நபர் அல்லது நபர்களால் ஆய்வு செய்ய ஆவன செய்வதற்கு உரிமை கொண்டதாக இருக்கும்.

(2) பல்கலைக்கழக நிருவாகம் அல்லது நிதி தொடர்புடைய பொருட்பாடு எதனையும் பொறுத்த அளவில், அரசு தன்னால் பணிக்கப்படும் நபர் அல்லது நபர்களால் விசாரணை செய்ய ஆவன செய்வதற்கு உரிமை கொண்டதாக இருக்கும்.

(3) அரசு, ஒவ்வொரு நேர்விலும், ஆய்வு அல்லது விசாரணை செய்ய ஆவன செய்வதற்கான தனது உட்கருத்து குறித்த அறிவிப்பைப் பல்கலைக்கழத்திற்குக் கொடுத்தல் வேண்டும். மேலும், அந்தப் பல்கலைக்கழகமானது, அந்த ஆய்விலோ அல்லது விசாரணையிலோ முறையீடு செய்து கொள்வதற்கு உரிமை கொண்டதாக இருக்கும்.

(4) அரசு, அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் விளைவு குறித்த தனது கருத்துகளைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்; மேலும், அதன் பேரிலான பல்கலைக்கழகத்தின் கருத்தினை உறுதி செய்து கொண்டபிறகு, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை குறித்து, பல்கலைக்கழகத்திற்கு ஆலோசனை கூறி, அந்த நடவடிக்கையை எடுப்பதற்கான கால வரம்பையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(5) பல்கலைக்கழகமானது, அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள், அரசால் வழங்கப்பட்ட ஆலோசனையின் பேரில் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதப்பட்ட நடவடிக்கையை அரசுக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(6) பல்கலைக்கழகம், நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் நடவடிக்கை எடுக்கவில்லையாயின் அல்லது பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை அரசின் கருத்துப்படி மனநிறைவளிப்பதாக இல்லையாயின், அரசு, பல்கலைக்கழகத்தால் அளிக்கப்பட்ட விளக்கம் அல்லது செய்யப்பட்ட முறையீடு எதனையும் பரிசீலனை செய்தபிறகு, தான் பொருத்தமெனக் கருதக்கூடிய பணிப்புரையைப் பிறப்பிக்கலாம். இப்பல்கலைக்கழகம் அந்தப் பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(7) அரசால் அதன்பொருட்டுநிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் அந்தப்பணிப்புரைக்கு பல்கலைக்கழகம் இணங்கி நடக்கவில்லையாயின் அரசு, அந்தப் பணிப்புரைக்கு இணங்கி நடப்பதற்காக, நபர் அல்லது குழு எதனையும் நியமிப்பதற்கும், அதற்கான செலவுகளுக்காகத் தேவைப்படலாகும் ஆணைகளைப் பிறப்பிப்பதற்கும் அதிகாரம் கொண்டதாக இருக்கும்.

## அத்தியாயம்–III.

## இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்.

பல்கலைக் கழகத்தின் அலுவலர்கள்.

**8.** இப்பல்கலைக்கழகம், பின்வரும் அலுவலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:–

(1) வேந்தர்;

(2) இணை வேந்தர்;

(3) துணை வேந்தர்;

(4) இயக்குநர்கள்;

(5) முதன்மையர்கள்;

(6) தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்;

(7) பதிவாளர்;

(8) நிதி அலுவலர்; மற்றும்

வேந்தர்.

**9.** இப்பல்கலைக்கழத்தில் அலுவலர்களௌன நிலைமுறை விதிகளால் விளம்பப்படக்கூடிய பிற நபர்கள்.

(1) தமிழ்நாடு ஆளுநர், இப்பல்கலைக்கழத்தின் வேந்தராக இருந்து வருவார்.

(2) வேந்தர் இப்பல்கலைக்கழத்தின் தலைவராக இருப்பதுடன், இப்பல்கலைக்கழத்தின் பட்டமளிப்பு விழா எதற்கும் வந்திருக்கும்போது அதற்குத் தலைமை வகித்து, பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்விச்சிறப்புகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களுக்கு அவற்றை வழங்குவார்.

(3) மதிப்புறு பட்டயம் அல்லது பிற சிறப்பு எதுவும், வேந்தரின் ஒப்புதலளிப்பின்றி நபர் எவருக்கும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுதல் ஆகாது.

(4) வேந்தர் தாமே முற்பட்டோ அல்லது விண்ணப்பமொன்றின் மீதோ, நடவடிக்கை எதனையும் பொறுத்து, அத்தகைய நடவடிக்கையின் முறைமை குறித்தோ, அதில் எடுக்கப்பட்ட முடிவு அல்லது •பிறப்பிக்கப்பட்ட ஆணை ஏதொன்றின் சரியான தன்மை, சட்டமுறைமை அல்லது பொருத்தமுடைமை குறித்தோ, தான் தெளிவுற உறுதிப்படுத்திக் கொள்ளும்பொருட்டு, இப்பல்கலைக்கழத்தின் அலுவலர் எவரின் அல்லது அதிகார அமைப்பு ஏதொன்றின் பதிவுக்கட்டினையும் தருவித்து ஆய்வு செய்யலாம்; மற்றும் எந்த நேர்விலேனும், அத்தகைய முடிவு அல்லது ஆணை எதுவும் மாற்றி அமைக்கப்படவோ, அறவு செய்யப்படவோ, எதிர்மாறாக்கப்படவோ, அல்லது மறுபரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பிவைக்கப்படவோ வேண்டும் என்று வேந்தருக்குத் தோன்றுமானால், அவர், அதன்படியே ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

**முதலாம் வரம்புரை:** ஆனால், இந்தப் பிரிவின்படியான அதிகாரங்களைச் செலுத்துமாறு கோரி வேந்தரிடம் செய்து கொள்ளப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்த விண்ணப்பம் தொடர்புடையதாகவிருக்கிற நடவடிக்கை, முடிவு அல்லது ஆணை எந்தத் தேதியில் அவ்விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், எந்த நபருக்கும் ஊறு விளைவிக்கத்தக்கதான ஆணை எதுவும், தன் தரப்பை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பொன்று அத்தகையவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, பிறப்பிக்கப்படுதலாகாது.

(5) வேந்தர், இந்த அவசரச் சட்டத்தினாலோ அல்லது நிலைமுறை விதிகளிலோ தமக்கு வழங்கப்படக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்திவருதலும் அல்லது விதிக்கப்படக்கூடிய பிற கடமைகளை ஆற்றிவருதலும் வேண்டும்.

**10.** (1) இம் மாநிலத்தில் வேளாண்மைத் துறையைத் தம் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், இப்பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக இருந்து வருவார். **இணை வேந்தர்.**

(2) வேந்தர், வராமை, நோய் காரணமாகவோ அல்லது பிற காரணம் எதனாலுமோ தனது கடமைகளை ஆற்ற இயலாதிருக்கும் போது, இணைவேந்தர், வேந்தர் தனது கடமைகளை மீண்டும் ஏற்கும் தேதிவரையில், வேந்தரின் கடமைகளை ஆற்றி வருவார்.

**11.** (1) ஒவ்வொரு துணைவேந்தரின் ஒவ்வொரு நியமனமும், (2)—ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மூவரின் பெயர்களைக் கொண்ட பட்டியல் ஒன்றிலிருந்து வேந்தரால் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய பெயர்பட்டியலில், மேற்சொன்ன குழுவின் உறுப்பினர் எவருடைய பெயரும் அடங்கியிருத்தல் கூடாது. **துணை வேந்தர்.**

**வரம்புரை:** ஆனால், வேந்தர், குழுவினால் அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ள நபர்கள் எவரொருவருக்கும் ஒப்புதலளிக்கவில்லையாயின், மூன்று வெவ்வேறு பெயர்கள் கொண்ட புதிய பெயர்ப்பட்டியல் ஒன்றை, (2)—ஆம் உட்பிரிவிற்கிணங்க அளிப்பதற்காக, மற்றொரு குழுவை அமைத்துருவாக்க அவர் நடவடிக்கைகள் எடுக்கலாம். மேலும் அந்தப் புதிய பெயர்ப் பட்டியலில் பெயர் குறிக்கப்பட்ட நபர்களில் ஒருவரைத் துணை வேந்தராக நியமித்தல் வேண்டும்.

(2) (1)—ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அக்குழுவானது மூவரைக் கொண்டிருக்கும்; அவர்களில் ஒருவரை, மேலாண்மைக்குழு பெயர் குறித்து நியமனம் செய்யும்; ஒருவரைக் கல்விமன்றம் பெயர் குறித்து நியமனம் செய்யும்; ஒருவரை வேந்தர் பெயர் குறித்து நியமனம் செய்வார்.

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு பெயர் குறித்து நியமனம் செய்யப்படுபவர் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளுள் ஏதொன்றின் உறுப்பினராகவும் இருத்தலாகாது.

(3) துணை வேந்தர், மூன்றாண்டுக் காலஅளவுக்குப் பதவி வகிப்பார்; மேற்கொண்டு முன்றாண்டுக் கால அளவுக்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

**வரம்புரை:** (a) துணைவேந்தர், வேந்தருக்குத் தாமே கையொப்பமிட்டு எழுத்து மூலமாக இரண்டு திங்கள் காலமுன்னறிவிப்புக் கொடுத்ததற்குப் பின்பு, தமது பதவியை விட்டு விலகலாம்;

(b) (i) உயர்நீதிமன்ற நீதிபதியொருவராக;

(ii) அரசுத் தலைமைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத அரசின் அலுவலரொருவராக; அல்லது

(iii) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகம் ஏதொன்றின் துணைவேந்தரொருவராக இருக்கிற அல்லது இருந்து வருகிற அத்தகைய நபரால், அரசினால் அவர் நியமிக்கப்படக்கூடியவாறான நிலையில் நடத்தப்பட வேண்டிய உரிய முறையிலான விசாரணையானது அரசினால் ஆணையிடப்பட்டு, அதில் அத்தகைய துணைவேந்தரின் பதவியிலிருந்து அகற்றப்படுவதற்கு எதிராகத் தமது முறையீட்டைச் செய்துகொள்வதற்கு வாய்ப்பொன்று அந்தத் துணைவேந்தருக்கு வழங்கப்பட்ட நிலையில், அந்த விசாரணைக்குப் பின்னர், வேந்தரால் வழங்கப்பட்ட ஆணையொன்றினால் தவிர,

இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதில் வேண்டுமென்றே தவறியுள்ளார் அல்லது நிறைவேற்ற மறுத்துள்ளார் அல்லது அவர்பால் உற்றமைந்துள்ள அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என்ற காரணத்தினால் துணைவேந்தர் அவர்தம் பதவியிலிருந்து அகற்றப்படுதல் கூடாது.

(4) இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் என்கின்ற காரணத்தாலோ, அல்லது ஏதேனும் பிற காரணத்தாலோ, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் ஏதேனும் ஏற்படும் நேர்வில், அத்தகைய காலியிடத்தை நிரப்புவதற்கு இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க நியமிக்கப்பட்ட ஒரு புதிய துணை வேந்தர் பதவியேற்கும் தேதி வரையில், பதிவாளர், அத்துணைவேந்தராகச் செயற்பட்டு வருதல் வேண்டும்.

(5) துணை வேந்தர், இப்பல்கலைக்கழகத்தின் முழு நேர அலுவலராக இருந்துவருவார். நிலைமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படும் ஊதியங்களையும், படித் தொகைகளையும், சிறப்புரிமைகளையும் பெறுவதற்கு உரிமைத் தகுதி உடையவராக இருப்பார்.

துணைவேந்தரின் அதிகாரங்களும் கடமைகளும்.

**12.** (1) துணை வேந்தர், இப்பல்கலைக்கழகத்தில் கல்வித் தலைவராகவும் முதன்மை நிருவாக அலுவலராகவும் இருந்து வருவார்.

(2) துணை வேந்தர், வேந்தரும் இணை வேந்தரும் வருகை தராதபோது, இப்பல்கலைக்கழகத்துப் பட்டமளிப்பு விழா எதிலும் தலைமை வகித்துப் பட்டங்களை, பட்டயங்களை அல்லது பிற கல்விச்சிறப்புகளைப் பெறுவதற்கான தகுதியுடையவர்களுக்கு அவற்றை அவர் வழங்குதல் வேண்டும்.

(3) துணை வேந்தர், இப்பல்கலைக்கழகத்து அலுவல்களின் மீது கட்டுப்பாட்டு அதிகாரத்தைச் செலுத்துதல் வேண்டும்; மற்றும் இப்பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு நடத்தை உரியவாறு பேணிவரப்படுவதற்குப் பொறுப்புடையவராயிருத்தல் வேண்டும்.

(4) துணை வேந்தர், குழுமத்தின் மற்றும் கல்விமன்றத்தின் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும்.

(5) துணை வேந்தர், இந்த அவசரச் சட்டம், நிலைமுறை விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றின் வகைமுறைகள் உண்மையிலேயே கடைப்பிடிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(6) துணை வேந்தர், பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிமதிப்பீடுகள், ஆண்டுகணக்குகள், ஐந்தொகைக் குறிப்பு ஆகியவற்றைக் குழுமத்திடம் முன்னிடுவதற்கு பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(7) உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவது தேவையென துணைவேந்தர் கருதுகிற நெருக்கடி நிலை எதிலும் அவர் ஆணையின் மூலமாக, தாம் தேவையெனக் கருதக்கூடிய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்; மற்றும் எடுக்கப்பட்ட அந்த நடவடிக்கை குறித்து அப்பொருள் குறித்து இயல்பாக நடவடிக்கை எடுத்திருந்திருக்கக்கூடிய அலுவலருக்கு அல்லது அதிகார அமைப்பிற்கு அல்லது அமைப்பிற்கு கூடிய விரைவில், அறிக்கை தருதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், அத்தகைய ஆணை எதுவும், பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடிய நபருக்குத் தமது தரப்பினை எடுத்துரைப்பதற்கான நியாயமானதொரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தாலன்றி பிறப்பிக்கப்படுதலாகாது.

(8) (7)—ஆம் உட்பிரிவின் படியான துணை வேந்தரின் ஆணை எதனாலேனும் குறையுற்றுள்ள நபர் எவரும், எந்தத் தேதியில் அத்தகைய ஆணை அவருக்கு தெரிவிக்கப்படுகிறதோ அந்தத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் குழுமத்திடம் மேல்முறையீடொன்று செய்துக்கொள்ளலாம்; மற்றும் துணைவேந்தர், அத்தகைய மேல்முறையீட்டின் மீது குழுமத்தால் பிறப்பிக்கப்படும் ஆணைக்குச் செயல்வடிவம் கொடுத்தல் வேண்டும்.

(9) துணை வேந்தர், கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கக் கல்வி ஆகியவற்றிற்கான ஒத்திசைவிற்கும் ஒருங்கிணைப்பிற்கும் பொறுப்புடையவராவர்.

(10) துணை வேந்தர், நிலைமுறை விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்திவருதலும் பிற கடமைகளைப் புரிந்து வருதலும் வேண்டும்.

**13.** (1) பதிவாளர், குழுமத்தின் ஒப்புதலளிப்புடன் துணை வேந்தரால் நியமிக்கப்பட்டு இப்பல்கலைக்கழகத்தின் சம்பளம் பெறும் முழு நேர அலுவலராக இருப்பார். பதிவாளரின் பணி பற்றிய வரையறைகளும், நிபந்தனைகளும் பின்வருமாறு இருக்கும்:— பதிவாளர்.

(a) பதிவாளர் பதவியை வகிப்பவர் இப்பல்கலைக்கழத்தின் அல்லது இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் பேராசிரியர் ஒருவரின் படிநிலைக்குக் குறையாத கல்வியாளர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(b) பதிவாளர் மூன்று ஆண்டுகளைக் கொண்ட கால அளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்;

**வரம்புரை:** ஆனால், பதிவாளராக நியமிக்கப்பட்ட நபர் ஒருவர் அவர்தம் பதவிக்கால அளவின் போது அறுபது ஆண்டுகள் என்பதான வயதினை அவர் நிறைவெய்தினால், அவர் பதிவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

(2) பதிவாளர், வகுத்துரைக்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்திவருதலும் கடமைகளை ஆற்றிவருதலும் வேண்டும்.

**14.** (1) நிதி அலுவலர், அரசினால் பரிந்துரைக்கப்பட்ட மூவரது பெயர்களைக் கொண்ட பட்டியல் ஒன்றிலிருந்து குழுமத்தால் நியமிக்கப்படும் இப்பல்கலைகழகத்தின் சம்பளம் பெறும் முழுநேர அலுவலராக இருப்பார். தகுதிப்பாடுகளும் ஆட்சேர்ப்பு முறையும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும். நிதி அலுவலர்.

(2) நிதி அலுவலர், குழுமம் குறித்துரைக்கக்கூடிய வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, மூன்றாண்டுக் கால அளவிற்குப் பதவி வகித்து வருவார்:

**வரம்புரை:** ஆனால், நிதி அலுவலராக நியமிக்கப்பட்டவர் தம்முடைய பதவிக்காலத்தின்போது ஐம்பத்தெட்டு வயது நிறைவெய்துவாரானால், பதவியிலிருந்து அவர் ஓய்வு பெறுதல் வேண்டும்.

(3) நிதி அலுவலரின் ஊதியங்களும் அவரது பணி குறித்த பிற வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

(4) நிதி அலுவலரின் பதவி காலியாக இருக்கும் போது, அல்லது நிதி அலுவலர் நோய், பணிக்கு வராமை என்கிற காரணத்தாலோ அல்லது பிற காரணம் எதனாலேனுமோ தம்முடைய பதவி அதிகாரங்களைச் செலுத்திவருவதற்கும் அலுவல்களைப் புரிந்துவருவதற்கும், கடமைகளை ஆற்றிவருவதற்கும் இயலாதவராக இருக்கும்போது, நிதி அலுவலரின் பதவிக்கான அதிகாரங்களையும் அலுவல்களையும் கடமைகளையும் அந்நோக்கத்திற்காகத் துணைவேந்தரால் குறிப்பிடப்படக்கூடிய நபரால் முறையே செலுத்திவரப்படுதலும், புரிந்துவரப்படுதலும், ஆற்றிவரப்படுதலும் வேண்டும்.

(5) நிதி அலுவலர், நிதிக் குழுவின் *பதவி—வழிச்* செயலாளராக இருந்துவருவார்.

(6) நிதி அலுவலர்,—

(a) இப்பல்கலைக்கழகத்தின் நிதியங்களின் மீது பொதுவான மேற்பார்வையைச் செலுத்தி வருதல் வேண்டும் என்பதோடு, அதன் நிதிக்கொள்கை குறித்து இப்பல்கலைக்கழத்திற்கு ஆலோசனை வழங்குதலும் வேண்டும், மற்றும்

(b) குழுமத்தால் தனக்குக் குறித்தளிக்கப்படக்கூடிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்திவருதலும் பிற நிதிசார் அலுவல்களைப் புரிந்துவருதலும் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், நிதி அலுவலர், குழுமத்தின் முன் ஒப்புதலளிப்பு இல்லாமல், வகுத்துரைக்கப்படக்கூடிய தொகைக்கு மேற்பட்டு செலவு செய்வதோ முதலீடு செய்வதோ கூடாது.

(7) குழுமத்தின் கட்டுப்பாட்டு அதிகாரத்திற்குட்பட்டு, நிதி அலுவலர்,—

(a) ஓராண்டிற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினங்கள் குழுமம் நிர்ணயித்த வரம்புகளுக்கு மேற்படாமலிருப்பதையும், பணங்கள் அனைத்தும், அவை வழங்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட நோக்கங்களுக்காகச் செலவிடப்படுவதையும் உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

(b) இப்பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள், நிதி மதிப்பீடுகள், வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும் நிதிக் குழுவிடமும் குழுமத்திடமும் அவற்றை முன்னிடுவதற்கும் பொறுப்புடையவராவார்.

(c) பணம் மற்றும் வங்கி இருப்புகளையும் முதலீடுகளையும் இடைவிடாது கண்காணித்து வருதல் வேண்டும்;

(d) வருவாய் வசூலிக்கப்படும் நிலையைக் கண்காணித்து, வசூலிக்கப் பயன்படுத்தப்படும் முறைகள் குறித்து ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

(e) கட்டடங்கள், நிலம், அறைகலன், சாதனங்கள் ஆகியவற்றின் பதிவேடுகள் நாளது தேதி வரை வைத்துப் பேணிவரப்படுவதை இப்பல்கலைகழகத்ததால் பேணிவரப்படும் அலுவலகங்கள், ஆய்வுக்கூடங்கள், கல்லூரிகள், கல்வி நிலையங்கள் ஆகிய அனைத்திலும் உள்ள சாதனங்கள் மற்றும் பிற நுகரத்தக்க பொருள்கள் இருப்பு நிலையைச் சரிபார்க்கும் பணி நடத்தப்படுவதையும் உறுதிசெய்து கொள்ளுதல் வேண்டும்.

(f) அதிகாரம் அளிக்கப்படாத செலவினம் எதையும் குறித்தோ அல்லது பிற நிதிசார் முறைகேடு குறித்தோ துணைவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும்; மற்றும் தவறு செய்துள்ளவர் மீது எடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கை குறித்து ஆலோசனை கூறுதலும் வேண்டும், மற்றும்

(g) தம்முடைய அதிகாரங்களைச் செலுத்தி வருவதற்காக தம்முடைய அலுவல்களைப் புரிந்துவருவதற்காக அல்லது தம்முடைய கடமைகளை ஆற்றி வருவதற்காக, தாம் தேவையெனக் கருதும் தகவல் அல்லது விவர அறிக்கைகளை இப்பல்கலைக்கழகத்தினால் பேணிவரப்படும் அலுவலகம், ஆய்வுக்கூடம், கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதிலிருந்தும் தருவித்தல் வேண்டும்.

முதன்மையர்.

**15. (1)** கல்லூரி ஒவ்வொன்றும், முதன்மையர் ஒருவரைப் பெற்றிருத்தல் வேண்டும்; அவர் பல்கலைக்கழகத்தின் முழு நேர ஊதியம் பெறும் அலுவலராக இருப்பார் மற்றும் அவர் வகுத்துரைக்கப்படும் வரையறைகளின் மற்றும் நிபந்தனைகளின் பேரில், குழுமத்தின் ஒப்புதலளிப்புடன், துணை வேந்தரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) முதன்மையர், குழுமத்தினால் குறித்துரைக்கப்படக் கூடிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மூன்று ஆண்டுகள் என்பதான கால அளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் அவர் மறு நியமனம் செய்யப்படுவதற்கு உரிமைத் தகுதி உடையவராதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், முதன்மையராக நியமிக்கப்பட்ட நபர் ஒருவர் அவர்தம் பதவிக்கால அளவின் போது அறுபது ஆண்டுகள் என்பதான வயதினை அவர் நிறைவெய்தினால், அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

(3) முதன்மையர், தன்னுடைய கல்லூரி தொடர்பான அனைத்து பொருட்பாடுகளுக்கும் துணை வேந்தருக்குப் பொறுப்புடையவராக இருப்பார்.

(4) முதன்மையர், வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்தி வருதலும் கடைமைகளைப் புரிந்துவருதலும் வேண்டும்.

இயக்குநர்கள்.

**16. (1)** இயக்குநர்கள், வகுத்துரைக்கப்படும் வரையறைகளின் மற்றும்

நிபந்தனைகளின் குழுமத்தின் ஒப்புதலளிப்புடன், துணை வேந்தரால் நியமிக்கப்படும் இப்பல்கலைக்கழகத்தின் சம்பளம் பெறும் முழுநேர அலுவலர்களாவார்கள்.

(2) இயக்குநர் ஒவ்வொருவரும், குழுமத்தினால் குறித்துரைக்கப்படக் கூடிய வரையரைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட மூன்று ஆண்டுகள் என்பதான கால அளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் அவர் மறு நியமனம் செய்யப்படுவதற்கு உரிமைத் தகுதி உடையவர் ஆதல் வேண்டும்;

**வரம்புரை:** ஆனால், இயக்குநராக நியமிக்கப்பட்ட நபர் ஒருவர் அவர்தம் பதவிக்கால அளவின் போது அறுபது ஆண்டுகள் என்பதான வயதினை அவர் நிறைவெய்தினால், அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

(3) ஆராய்ச்சி இயக்குநர், ஆய்வு நிலையங்களின் முறையான செயல்பாட்டிற்குப் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும். மேலும் முதன்மையரின் மற்றும் பிற அலுவலர்களின் ஆராய்ச்சியை ஒருங்கிணைத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்திவருதலும் கடமைகளைப் புரிந்துவருதலும் வேண்டும்.

(4) விரிவாக்கக் கல்வி இயக்குநர், முதன்மையர் மற்றும் பிற அலுவலர்களின் ஒத்துழைப்புடன், ஆராய்ச்சி மற்றும் பணி விளைவுகளின் அடிப்படையில், விரிவாக்கப் பணி திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் பொறுப்புடையவராக இருப்பார். மேலும் வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துதலும் கடமைகளைப்புரிந்து வருதலும் வேண்டும்.

(5) பயிர் மற்றும் உயிர் அறிவியல் இயக்குநர், பன்னாட்டு திட்ட இயக்குநர், பயிர்பாதுகாப்பு இயக்குநர், உயிரி—வள ஆதாரம் மற்றும் அறுவடைக்குப் பிந்திய பொறியியல் இயக்குநர், வேளாண் வணிக வளர்ச்சி இயக்குநர் மற்றும் பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் என நிலைமுறை விதிகளால் விளம்பப்படகூடிய பிற நபர்கள், வகுத்துரைக்கப்படும் செயல்திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்கும் பொறுப்புடையவராக இருப்பார். மேலும் வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துதலும், கடமைகளைப் புரிந்து வருதலும் வேண்டும்.

**தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.**

**17.** (1) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், தோட்டக்கலை மற்றும் தொடர்புடைய அறிவியல் துறைகளில் கல்வியாளராக இருத்தல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரிலும், கால அளவிற்கும் குழுமத்தின் ஒப்புதலளிப்புடன் துணைவேந்தரால் நியமிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தி வருதலும், கடமைகளைப் புரிந்து வருதலும் வேண்டும்:

**வரம்புரை:** தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக நியமிக்கப்பட்ட நபர் ஒருவர், தனது பதவிக்காலத்தின்போது, அறுபது வயது நிறைவெய்தினால் பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

## அத்தியாயம் IV.

## இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்

**இப்பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்புகள்.**

**18.** மேலாண்மைக் குழுமம் கல்வி மன்றம், புலம் ஒவ்வொன்றின் பாடத்திட்ட குழுமங்கள், ஆகியவையும், இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளென நிலைமுறை விதிகளால் விளம்பப்படும் இப்பல்கலைக்கழகத்தின் பிற அமைப்புகளும் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளாகும்.

**மேலாண்மைக் குழுமத்தினை அமைத் துருவாக்குதல்.**

**19.** (1) 46—ஆம் பிரிவின்படி முதல் துணை வேந்தர் நியமிக்கப்பட்டதற்குப் பின்னர், வேந்தர், கூடியவிரைவில் மேலாண்மைக் குழுமமொன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) அக்குழுமம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், அதாவது:—

**வகை I—பதவி வழி உறுப்பினர்கள்.**

(a) துணை வேந்தர்;

(b) வேளாண்மைத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(d) தோட்டக்கலை இயக்குநர்;

(e) வேளாண்மை இயக்குநர்;

(f) சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் அலுவல் ஆணையர்;

(g) விதைச் சான்றிடுதல் இயக்குநர்;

(h) வன தலைமைப் பாதுகாவலர்;

(i) வேளாண் பொறியியல் தலைமைப் பொறியாளர்; மற்றும்

(j) பதிவாளர்

**வகை II—பிற உறுப்பினர்கள்.**

(a) தோட்டக்கலையை ஆராய்ச்சி செய்வதிலும் பயிற்றுவிப்பதிலும் விரிவாக்கக் கல்வி அளிப்பதிலும் சிறப்பு அறிவையோ நடைமுறைப் பட்டறிவையோ பெற்றிருக்கின்ற தோட்டக்கலை அறிவியலாளர் ஒருவர்; அவர் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படுவார்;

(b) பயிரிடும் விவசாயி ஒருவர்; அவர் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படுவார்;

(c) உயர் தொழில் நுட்ப தோட்டக்கலை விவசாயி ஒருவர்; அவர் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படுவார்;

(d) வேளாண்மை அலுவலைச் சார்பாற்றம் செய்யும் ஒருவர்; அவர் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படுவார்;

(e) சமூக சேவகி ஒருவர்; அவர் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படுவார்;

(f) கல்வியாளர் ஒருவர்; அவர் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படுவார்;

(g) இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றத்தின் நியமனதாரர் ஒருவர்; மற்றும்;

(h) தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் தங்களுக்கிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர்.

(3) வேளாண்மைத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், எந்தக் காரணத்தினாலேனும் குழுமத்தின் கூட்டங்களுக்கு வர இயலாமற் போனால், அரசு இணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாமல் உள்ள, தமது துறையின் அலுவலர் எவரையும் அக்கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அவர் அதிகாரமளித்து அனுப்பி வைக்கலாம். அவ்வாறு அதிகாரமளித்து அனுப்பிவைக்கப்பட்ட அலுவலர், அக்கூட்டத்தின் விவாதங்களில் பங்கேற்பதற்காக உரிமையைப் பெற்றிருப்பார் என்பதுடன், அதில் வாக்களிப்பதற்கான உரிமையையும் பெற்றிருப்பார்.

(4) துணைவேந்தர், குழுமத்தின் **பதிவு—வழித்** தலைவராக இருந்து வருவார், பதிவாளர், குழுமத்தின் **பதவி—வழிச்** செயலாளராக இருந்துவருவார்.

(5) (a) **பதவி—வழி** உறுப்பினர்களல்லாத குழுமத்தின் பிற உறுப்பினர்கள், மூன்றாண்டுக் கால அளவிற்குப் பதவி வகிப்பர். மேலும் அத்தகைய உறுப்பினர்கள் மற்றொரு மூன்றாண்டுக் கால அளவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராவர்.

(b) ஓர் உறுப்பினர் தற்செயல் காலியிடத்தில் மேலாண்மைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவிடத்து அல்லது பெயர் குறித்து நியமமிக்கப்படுகிறவிடத்து, அத்தகைய உறுப்பினர் எவராலும் ஓராண்டிற்குக் குறையாமல் வகிக்கப்பட்ட பதவிக்கால அளவானது, மூன்றாண்டு முழுக் கால அளவாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**முதலாம் வரம்புரை:** ஆனால், குறிப்பிட்டதொரு தொகுதியின் அல்லது அமைப்பின் ஓர் உறுப்பினர் என்ற திறனில் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட குழும உறுப்பினர் ஒருவர், அந்தத் தொகுதியின் அல்லது அமைப்பின் உறுப்பினராக அல்லது நேர்வுக்கேற்ப அந்தப் பதவியை வகிப்பவராக இருப்பது அற்றுப் போகிற தேதியிலிருந்து, குழுமத்தின் உறுப்பினராக இருப்பதும் அற்றுப்போகும்.

**இரண்டாம் வரம்புரை:** மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மேலாண்மைக் குழு உறுப்பினர் ஒருவர், எந்தப்பதவி காரணமாக, மேலாண்மைக் குழுவின் **பதவி–வழி** உறுப்பினராக இருப்பதற்கு உரிமையுடையவராக இருக்கிறாரோ அந்தப்பதவிகளில் எதற்கும் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவிடத்து, அவர், பதவிப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் அவர் கையொப்பமிட்டு எழுத்துருவில் அறிவிப்பு வாயிலாகத் துணைவேந்தருக்குத் தெரிவிப்பதன் மூலம், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதன் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக மேலாண்மைக் குழுமத்தின் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பாரா அல்லது அத்தகைய உறுப்பினர் என்ற தமது பதவியைக் காலிசெய்துவிட்டு அவரது நியமனத்தின் காரணமாக **பதவி–வழி** உறுப்பினராக ஆவாரா என்பதைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். மேலும், அந்தத் தெரிவு அறுதியானதாகும். அந்தத் தெரிவைச் செய்யத் தவறியதன் பேரில், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினராக உள்ள அவரது பதவியைக் காலி செய்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) துணை வேந்தர் மற்றும் பதிவாளர் அல்லாத பிற, பல்கலைக்கழகத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், குழுமத்தின் ஓர் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியுடையவர் ஆகார்.

(7) குழும உறுப்பினர்கள் வகுத்துரைக்கப்படக்கூடிய நாட்படி மற்றும் பயணப்படிகள் தவிர, இப்பல்கலைக்கழகத்திடமிருந்து ஊதியம் எதையும் பெறுவதற்கு உரிமை உடையவர்களாக மாட்டார்கள்.

(8) வேந்தர், தரப்பினை எடுத்துரைப்பதற்கு ஒரு நியாயமான வாய்ப்பைக் கொடுத்ததற்குப் பின்பு, **பதவி–வழி** உறுப்பினர் அல்லாத பிற குழு உறுப்பினர் எவரும், வேந்தரின் கருத்துப்படி ஓர் உறுப்பினராகச் செயற்படுவதற்குத் தகுதியற்றவராக இருந்தால் அல்லது உறுப்பினராக அவர் தொடர்ந்திருப்பது பல்கலைக்கழகத்தின் நலன்களுக்குப் பாதகமானதாக இருக்கிறவாறு தனது உறுப்பினர் நிலையைத் தவறாகப் பயன்படுத்தியிருந்தால், அவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

**20.** குழுமத்தின் அதிகாரங்களும், கடமைகளும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்,– **குழுமத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.**

(a) இப்பல்கலைக்கழகத்தின் நிதித் தேவைப்பாடுகள் குறித்துப் பரிசீலித்து ஆய்வு செய்தல்; மற்றும் அதன் ஆண்டு நிதி மதிப்பீடுகளுக்கு ஒப்புதலளித்தல்;

(b) இப்பல்கலைக்கழகத்தின் பொறுப்பில் விடப்பட்ட நிதியங்கள், கருதப்பட்ட நோக்கங்களுக்ககாக நிருவகிக்கப்படுவதற்கு வகை செய்தல்;

(c) இப்பல்கலைக்கழகத்தின் நிதியங்களை முதலீடு செய்வதற்கும் திரும்பப்பெறுவதற்கும் ஏற்பாடு செய்தல்;

(d) முதலீட்டினை மேம்படுத்துவதற்காகப் பணத்தைக் கடன் வாங்குதல்; மற்றும், அது திருப்பிச் செலுத்தப்படுவதற்காக தக்க ஏற்பாடுகளைச் செய்தல்;

(e) இப்பல்கலைக்கழகத்தின் சார்பாக சொத்துக்களை ஈட்டுதலும், வைத்துவருதலும், வகை செய்தலும்;

(f) இப்பல்கலைக்கழகத்தின் பொது இலச்சினையின் வடிவத்தைத் தீர்மானித்தலும், அதன் பாதுகாப்பிற்கு வகை செய்தலும், அதன் பயன்பாட்டினை முறைப்படுத்தலும்;

(g) தான் தேவையெனக் கருதக்கூடிய நிலைக் குழுக்களையோ தற்காலிகக் குழுக்களையோ நியமித்தல்; மற்றும், இந்த அவசரச் சட்டத்தின் மற்றும் நிலைமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, எந்தெந்தப் பொருள்கள் குறித்து அவற்றிடம் குறிப்பிட்டனுப்பலாம் என்பதைக் குறித்துரைத்தல்;

(h) இந்த அவசரச் சட்டத்தின் மற்றும் நிலை முறை விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்க, இப்பல்கலைக்கழகம் தொடர்பான கொள்கைப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்மானித்தல் மற்றும் அவற்றை முறைப்படுத்துதல்;

(i) கல்வி மன்றத்தால் தீர்மானிக்கப் படக்கூடிய கல்விப் பிரிவுகளிலும் குறித்தகாலப் பாடப் பிரிவுகளிலும் பயிற்றுவித்தல், கற்பித்தல், ஆராய்ச்சி செய்தல், அறிவை மேம்படுத்துதல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றிற்காக நிதிக்கு வகை செய்தல்;

(j) கல்லூரிகள், மாணவர் விடுதிகள், ஆய்வுக் கூடங்கள், சோதனைப் பண்ணைகள் ஆகியவற்றை நிறுவிப் பேணிவருவதற்கும், இந்த அவசரச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையானவையாகவுள்ள பிற வசதிகளுக்கும் வகை செய்தல்;

(k) பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்தி வழங்குவதற்கு வகை செய்தல்;

(l) படிப்புதவித் தொகைகள், பட்டதாரி உதவித் தொகைகள், மாணவர் உதவித் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் மற்றும் அவை போன்றவற்றை ஏற்படுத்திப் பேணி வழங்கி வருவதற்கு வகை செய்தல்;

(m) தன்னிடம் அளிக்கப்படும் பொறுப்பாட்சித் சொத்து, உயில்வழிக் கொடை, நன்கொடை, அசையும் அல்லது அசையாச் சொத்து ஏதொன்றின் உரிமை மாற்றம் ஆகியவற்றை இப்பல்கலைக்கழகத்தின் சார்பாக ஏற்றுக்கொள்ளுதல்;

(n) இப்பல்கலைக்கழகத்தின் சார்பாக ஒப்பந்தம் செய்து கொள்ளுதல்;

(o) பொது–தனியார் கூட்டாண்மை முறையின் கீழ் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்களைச் செயற்படுத்துதல்; மற்றும்

(p) இந்த அவசரச் சட்டத்தின் அல்லது நிலைமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதனவாயிராத வகையில் இந்த அவசரச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவற்குத் தேவையானவையாயிருக்கக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்திவருதல் மற்றும் கடமைகளை ஆற்றி வருதல்.

குழுமத்தின் கூட்டங்கள்

**21.** **(1)** வகுத்துரைக்கப்படக்கூடிய காலங்களிலும் இடங்களிலும் குழுமம் கூடுதல் வேண்டும்; மற்றும் **(2)**, **(3)** ஆகிய உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, தன் கூட்டங்களின் குறைவெண்வரம்பு உள்ளடங்கலாக, அக்கூட்டங்களில் அலுவல் நடத்துவது தொடர்பாக வகுத்துரைக்கப்படக்கூடிய நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், குழுமம், குறைந்தது ஒவ்வொரு மூன்று திங்களுக்கும் ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும்.

(2) துணை வேந்தரோ அல்லது அவர் வராதபோது, வந்திருக்கும் உறுப்பினர்களால் தெரிந்தெடுக்கப்படும் உறுப்பினர் எவரேனுமோ, குழுமத்தின் கூட்டமொன்றிற்குத் தலைமை வகிப்பார்.

**(3)** குழுமத்தின் கூட்டம் எதிலும் எழும் அனைத்துக் கேள்விகளும், வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரால் முடிவுசெய்யப்படுதல்

வேண்டும்: மற்றும் வாக்குகள் சமமானவையாக அமைகின்ற நேர்வில், துணை வேந்தரோ அல்லது நேர்விற்கேற்ப தலைமை வகிக்கின்ற உறுப்பினரோ, இரண்டாவது அல்லது அறுதிவாக்கு ஒன்றைப் பெற்றிருத்தலும் அதைச் செலுத்துதலும் வேண்டும்.

(4) (a) குழுமம், பரிசீலனையில் உள்ள பொருள் எதிலும் சிறப்பு அறிவையோ அல்லது நடைமுறைப் பட்டறிவையோ பெற்றிருக்கின்ற எவரையும் கலந்தாய்வு நோக்கத்திற்காக, கூட்டம் எதற்கும் வருகைதருமாறு அழைப்பு விடுக்கலாம். அத்தகையவர் அத்தகைய கூட்டங்களின் நடவடிக்கைகளில் பேசவும் மற்றப்படி பங்கேற்கவும் செய்யலாம்; ஆனால் வாக்களிப்பதற்கு உரிமைத்தகுதியுடையராகமாட்டார்.

(b) அவ்வாறு அழைக்கப்பட்டவர், குழுமத்தின் உறுப்பினர் ஒருவருக்கு அனுமதிக்கத்தக்கவையான நாட்படி மற்றும் பயணப்படிகளுக்கு உரிமைத்தகுதியுடையவராவார்.

**22.** கல்வி மன்றம், இப்பல்கலைக்கழகத்தின் கல்விசார் அதிகார அமைப்பாக இருக்கும்; அது இந்த அவசரச் சட்டத்தின் மற்றும் நிலைமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இப்பல்கலைக்கழகத்தின் பயிற்றுவித்தல், தேர்வு ஆகியவை குறித்துக் கட்டுப்பாட்டுரிமையையும் பொதுவாக அவற்றை முறைப்படுத்துகின்ற உரிமையையும் பெற்றிருக்கும்; மேலும் அவற்றின் தரங்களைப் பேணிவருவதற்கும் அது பொறுப்புடையதாகும்.

**23.** (1) கல்வி மன்றம், பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், அதாவது:— **கல்வி மன்றம் அமைப்பு.**

(a) துணைவேந்தர்;

(b) வேளாண்மை துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) முதன்மையர்கள்;

(d) இயக்குநர்கள்; மற்றும்

(e) துறைத்தலைவர்களுக்கிடையேயிருந்து ஆறு உறுப்பினர்கள்: துணைவேந்தர் இவர்களைச் சுற்றுமுறை அடிப்படையில் பெயர் குறித்து நியமிப்பார்;

(f) தோட்டக்கலையின் பல்வேறு கூறுகளில் சிறப்பு அறிவையோ நடைமுறைப் பட்டறிவையோ பெற்றிருக்கின்ற இருவர்: இவர்களை துணைவேந்தர் பெயர் குறித்து நியமிப்பார்; மற்றும்

(g) பதிவாளர்.

(2) துணைவேந்தர், கல்வி மன்றத்தின் பதிவு—வழித் தலைவராக இருந்துவருவார்; பதிவாளர், கல்வி மன்றத்திற்குப் பதிவு—வழிச் செயலாளராக இருந்துவருவார்.

(3) கல்வி மன்றத்தின் பதவி—வழி உறுப்பினர்களல்லாத பிற உறுப்பினர்களின் பதவிக் கால அளவு மூன்றாண்டுகளாக இருக்கும்:

**வரம்புரை:** ஆனால் குறிப்பிட்ட பதவியை வகிப்பவர் என்ற தகுதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்கிற கல்வி மன்ற உறுப்பினர் ஒருவர், அந்தப்பதவியை அவர் வகிப்பது அற்றுப் போகிற தேதியிலிருந்து கல்வி மன்றத்தின் ஓர் உறுப்பினராக இருப்பதும் அற்றுப்போகும்.

**24.** கல்வி மன்றத்தின் அதிகாரங்களும் கடமைகளும் பின்வருவனவாக இருக்கும்,—

(a) பயிற்றுவிப்பது மற்றும் பிற கல்வித் திட்டங்களின் மீது பொதுவான கட்டுப்பாட்டதிகாரத்தைச் செலுத்திவருவது மற்றும் அவற்றின் தரங்களைப் பேணி மேம்படுத்துவது; **கல்வி மன்றத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.**

(b) ஒழுங்குமுறை விதிகளைச் செய்வது மற்றும் அவற்றைத் திருத்துவது அல்லது நீக்குவது;

(c) (i) இப்பல்கலைக்கழகத்தில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது, சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்தும்;

(ii) பட்டங்கள், பட்டயங்கள் பிற கல்விச்சிறப்புகள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழிவகுக்கின்ற குறித்தகாலப் பாடப்பிரிவுகள் குறித்தும்; மற்றும்

(iii) தேர்வுகளை நடத்துவது மற்றும் கல்வித் தரங்களைப் பேணி மேம்படுத்துவது குறித்தும் ஒழுங்குமுறை விதிகளைச் செய்வது;

(d) நூலகங்களின் மீது கட்டுப்பாட்டதிகாரம் செலுத்தி அவற்றை நிருவகித்து வருவது உள்ளிட்ட, கல்வி தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளிலும் குழுமத்திற்கு ஆலோசனை வழங்குவது;

(e) பேராசிரியர் பதவி, இணைப் பேராசிரியர் பதவி, உதவிப் பேராசிரியர் பதவி, மற்றும் ஆராய்ச்சி செய்தல், விரிவாக்கக் கல்வி ஆகியவற்றிற்கான பிற பதவிகள் உள்ளடங்கலான பயிற்றுவிக்கும் பதவிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கும் அவற்றின் கடமைகள் தொடர்பாகவும் குழுமத்திடம் பரிந்துரை செய்வது;

(f) பயிற்றுவித்தல், ஆராய்ச்சி செய்தல், விரிவாக்கக் கல்வி ஆகிய துறைகளை அமைத்துருவாக்குவதற்கான புதிதாக மாற்றி அமைத்துருவாக்குவதற்கான திட்டங்களை உருவாக்குவது, மாற்றியமைப்பது அல்லது திருத்தியமைப்பது;

(g) பட்டமேற்படிப்பில் பயிற்றுவித்தல், ஆராய்ச்சி செய்தல், விரிவாக்கக் கல்வி ஆகியவை குறித்துக் குழுமத்திடம் பரிந்துரை செய்வது;

(h) பயிற்றுவித்தல், மற்றும் விரிவாக்கக் கல்வி தொடர்பாக இப்பல்கலைக்கழகத்தில் உள்ள பதவிகளில் வகுத்துரைக்கப்படவேண்டிய தகுதிப்பாடுகள் எவை என்பது குறித்துக் குழுமத்திடம் பரிந்துரை செய்வது;

(i) மதிப்புறு பட்டங்களையோ பிற சிறப்புகளையோ வழங்குவது குறித்து குழுமத்திடம் பரிந்துரை செய்வது; மற்றும்

(j) நிலைமுறை விதிகளினால் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்திவருவதும் பிற கடமைகளை ஆற்றிவருவதும்.

புலங்கள்.

**25.** (1) இப்பல்கலைகழகம் தோட்டக்கலை, அடிப்படை அறிவியல், தோட்டக்கலைப் பொறியியல், தகவல் தொழில் நுட்பம், வேளாண்மை வணிகம், இயற்கை வனப்புடன் கூடிய கட்டடக்கலை புலங்களையும் நிலைமுறை விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற புலங்களையும் உள்ளடங்கியதாயிருக்கும்.

(2) புலம் ஒவ்வொன்றும் முதன்மையார் ஒருவரைப் பெற்றிருக்கும்; அவர்; வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் நியமிக்கப்படுவார்.

(3) புலம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய குறிப்பிட்டொதுக்கப்பட்ட பாடப் பொருள்களைப் பெற்றவையாயுள்ள வகுத்துரைக்கப்படக்கூடிய பயிற்றுவித்தல் துறைகளைக் கொண்டிருக்கும்; மற்றும் துறை ஒவ்வொன்றும், தலைவர் ஒருவரைப் பெற்றிருக்கும்: அவர் அந்தத் துறையை முறையாக அமைத்துச் செயற்படச்செய்வதைப் பொறுத்த அளவில் முதன்மையருக்குப் பொறுப்புடையவராக இருப்பர்.

(4) ஒவ்வொரு புலத்திற்கும் பாடக்குழு ஒன்று இருக்கும், அதன் அமைப்பும் அலுவலர்களும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருக்கும்.

(5) புலங்களின் அமைப்பும் அலுவல்களும், பிற அனைத்துப் பொருள்களையும் பொறுத்தமட்டில், வகுத்துரைக்கப்படக்கூடியவையாக இருக்கும்:

**வரம்புரை:** ஆனால், புலம் ஒவ்வொன்றின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் நான்கில் மூன்று பங்கிற்குக் குறையாதவர்கள், கல்வி மன்றத்தின் உறுப்பினர்களாக இருப்பர்.

**26.** பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் அனைத்தும், குழுக்களை அமைத்துருவாக்குவதற்கும், மீண்டும் அமைத்துருவாக்குவதற்கும் மற்றும் தான் பொருத்தமெனக் கொள்ளலாகும் அதிகாரங்களை அவற்றிடம் ஒப்படைவு செய்வதற்கும் அதிகாரம் கொண்டிருக்கும், அந்தக் குழுக்கள், பிறவாறு வகை செய்யப்பட்டாலன்றி தொடர்புடைய அதிகார அமைப்பின் உறுப்பினர்களும், ஒவ்வொரு நேர்விலும், அதிகார அமைப்பு பொருத்தமெனக் கருதும் பிற நபர்கள் எவரேனும் இருந்தால் அந்நபர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். **குழுக்களை அமைத்துருவாக்குதலும் அதிகாரங்களை ஒப்படைவு செய்தலும்.**

## அத்தியாயம் V.

## ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி அமைப்புகள்.

**27.** (1) இந்த அவசரச் சட்டத்தின் மற்றும் நிலைமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இப்பல்கலைக்கழகம், தோட்டக்கலை வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு, முதன்மையாக தோட்டக்கலை மற்றும் அதனோடு தொடர்புடைய அறிவியல்கள் தொடர்பான பிரச்சனைகள் குறித்து அடிப்படை ஆராய்ச்சி செய்வதற்காக தோட்டக்கலை ஆராய்ச்சி அமைப்பொன்றை நிறுவுதல் வேண்டும்: மற்றும் இந்த நோக்கத்திற்காக, தோட்டக்கலைத்துறையின் ஒத்துழைப்புடன், தேவையாயிருக்கக்கூடிய எண்ணிக்கையில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுதல் வேண்டும். **தோட்டக் கலை ஆராய்ச்சி அமைப்பு.**

(2) தோட்டக்கலை ஆராய்ச்சி அமைப்பானது, ஆராய்ச்சி இயக்குநரின் வழிகாட்டு நெறியின்படி மேம்படுத்தப்படுதல் வேண்டும்.

**28.** (1) இந்த அவசரச் சட்டத்தின் மற்றும் நிலைமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இப்பல்கலைக்கழகம், தோட்டக்கலை விரிவாக்கக் கல்வி அமைப்பொன்றை நிறுவுதல் வேண்டும்: அது, ஆராய்ச்சி அடிப்படையில் பெற்ற தகவலை மாணவர்கள், விரிவாக்கப் பணியாளர்கள், தோட்டக்கலை விவசாயிகள் ஆகியோருக்கு கிடைக்குமாறு செய்தல் வேண்டும்: மற்றும் தொடர்புடைய அரசுத் துறைகளின் ஒத்துழைப்போடு, அத்தகையவர்களின் நலனுக்காக, செய்முறை விளக்க நிகழ்ச்சியையும் பயிற்சித் திட்டத்தையும் நடத்துதல் வேண்டும். **தோட்டக் கலை விரிவாக்கக் கல்வி அமைப்பு.**

(2) இப்பல்கலைக்கழகம்,—

(a) கிராமப்புற வாழ்க்கை நிலைகளை உயர்த்துவதற்கு இன்றியமையாதவையாகவுள்ள மேம்படுத்தப்பட்ட பயில்முறைகளில் தோட்டக்கலை ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளையும் அதன் மீதான மேம்பாடுகளையும் தோட்டக்கலை விவசாயிகளுக்கு தெரியப்படுத்துவதற்கும் செய்முறையில் காண்பிப்பதற்கும்;

(b) காய்கனிகள் உணவு உற்பத்தி மற்றும் பயன்பாட்டிற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளித்து, தோட்டக்கலை உற்பத்தியை அதிகரிப்பதற்கும்; மற்றும்

(c) தோட்டக்கலை ஆராய்ச்சி அமைப்பினால் உருவாக்கப்பட்ட அல்லது அறிமுகப்படுத்தப்பட்ட மேம்படுத்தப்பட்ட வகையைச் சார்ந்த மூலவிதைகளைப் பெருக்குவதற்கும் தேவையான தோட்டக்கலை விரிவாக்கக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(3) தோட்டக்கலை விரிவாக்கக் கல்வி அமைப்பானது, விரிவாக்கக் கல்வி இயக்குநரின் வழிகாட்டுதலின்படி மேம்படுத்தப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

## நிதியங்களும் கணக்குகளும்.

பொதுநிதியம்.

**29. (1)** இப்பல்கலைக்கழகம் பொது நிதியமொன்றைக் கொண்டிருக்கும், அதில்,—

(a) கட்டணங்கள், நிலைக்கொடைகள், மானியங்கள், நன்கொடைகள், விருப்பக் கொடைகள் ஆகியவற்றின் மூலமான வருமானம் ஏதேனுமிருப்பின், அதையும்;

(b) மைய அரசாலோ, மாநில அரசு எதனாலேனுமோ பல்கலைக்கழக மானிய ஆணையத்தாலோ அல்லது அது போன்ற அதிகார அமைப்பினாலோ அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனாலேனுமோ அல்லது அத்தகைய அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டின்கீழுள்ள நிறுவனம் எதனாலேனுமோ செய்யப்படும் பங்களிப்பு அல்லது மானியளிப்பு எதையும்; மற்றும்

(c) பிற வருவாய்களையும் வரவுவைத்தல் வேண்டும்.

(2) பொது நிதியத்தில் உள்ள பணங்கள் அனைத்தும், 1882—ஆம் ஆண்டு இந்தியப் பொறுப்புக் கட்டளைகள் சட்டத்தின் 20—ஆம் பிரிவின் (a) முதல் (d) வரையுள்ள கூறுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிணையங்களில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் 11/1882

(3) பல்கலைக்கழகம், அரசால் செய்யப்படும் மானியமளிப்பு எதுவும் மற்றும் அதனைப்பயன்படுத்துதல் தொடர்பான விளக்கவுரைகள், கணக்குகள், அறிக்கைகள் மற்றும் பிற விபரங்களை அரசு கோரக்கூடியவாறு அளித்தல் வேண்டும்

பிற நிதியங்கள்.

**30.** இப்பல்கலைக்கழகம், நிலைமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற நிதியங்களைக் கொண்டிருக்கலாம்.

நிதியங்களை நிருவகித்தல்.

**31.** இப்பல்கலைக்கழகத்தின் நிதியங்கள் மற்றும் பணங்கள் அனைத்தும், வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

மானியங்கள்.

**32.** அரசு, ஒவ்வோர் ஆண்டும் இப்பல்கலைக்கழகத்திற்கு, பின்வருமாறு காலக் கழிவுறா ஒட்டுமொத்த மானியத் தொகைகளை வழங்குதல் வேண்டும்:

(a) தோட்டக்கலை மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல்கள் தொடர்பான கல்வி நிலையங்கள், இப்பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ள தோட்டக்கலை மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல்கள் தொடர்பான பிற அரசுத் துறைகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளைப் பொறுத்து அந்த ஆண்டில் செலவிட நேர்ந்த நிகர செலவிற்குக் குறையாத மானியமொன்றையும்;

(b) இப்பல்கலைக்கழகத்தின் பணியாளர் தொகுதிக்கான சம்பளம் மற்றும் படித் தொகைகள் எதிர்பாராச் செலவுகள், வழங்கீடுகள் மற்றும் பணிச்சேவைகள் ஆகியவற்றிற்கான மதிப்பிடப்பட்ட செலவுகளுக்குக் குறைவாக இல்லாத மானியமொன்றையும்; மற்றும்

(c) இப்பல்கலைக்கழகம் உரியவாறு செயற்படுவதற்கு அரசு தேவையெனக் கருதும் கூடுதலான தொடர்பு மற்றும் தொடராச் செலவினங்களை எதிர்கொள்வதற்கான மானியமொன்றையும் வழங்குதல் வேண்டும்.

நிதிக் குழு.

**33. (1)** குழுமம், பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற நிதிக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும், அதாவது:—

(a) துணை வேந்தர்;

(b) வேளாண்மை துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(d) அரசு வழி அலுவலர்களல்லாத தனது பிற உறுப்பினர்களுக்கிடையேயிருந்து குழுமத்தால் தெரிந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர்; மற்றும்

(e) நிதி அலுவலர்.

(2) நிதி அலுவலர், நிதிக் குழுவின் பதவி–வழிச் செயலாளராக இருந்து வருவார்.

(3) காரணங்கள் எதற்காகவும் வேளாண்மைத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் நிதிக்குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலவில்லையானால் அவர் அரசின் இணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத தன்னுடைய துறையின் அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கலாம்; அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட அலுவலர், கூட்டத்தின் கலந்துரையாடல்களில் பங்குகொள்வதற்கும், வாக்களிப்பதற்கும் உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

(4) நிதிக்குழு,—

(a) இப்பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகளையும் ஆண்டு நிதி மதிப்பீடுகளையும் பரிசீலனை செய்தலும் அவற்றின் மீது குழுமத்திற்கு ஆலோசனை வழங்குதலும் வேண்டும்;

(b) அவ்வப்போது, இப்பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையை ஆய்வு செய்தல் வேண்டும்;

(c) ஆண்டு நிதி மதிப்பீடுகளில் வகைமுறை எதுவும் செய்யப்பட்டிராத செலவினத்தை உள்ளடக்கியுள்ள, கருத்துரு ஒவ்வொன்றின் பேரிலும் குழுமத்திற்குப் பரிந்துரை செய்தல் வேண்டும்; மற்றும்

(d) இப்பல்கலைக்கழக நிதிகள் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளின் பேரிலும் குழுமத்திற்குப் பரிந்துரை செய்தல் வேண்டும்.

**34.** (1) நிதி அலுவலரால் தயாரிக்கப்படும் ஆண்டுக் கணக்குகள், அரசு பணிக்கக்கூடிய பரிசீலனைக்கும் தணிக்கைக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் ஆண்டுக் கணக்குகளின் மற்றும் தணிக்கை அறிக்கையின் படியொன்று, அரசுக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். **ஆண்டுக் கணக்குகள்.**

(2) இப்பல்கலைக்கழகம் அத்தணிக்கையில் எழுப்பப்பட்ட மறுப்புகளைத் தீர்த்து முடிவு செய்தல் வேண்டும் என்பதோடு, தணிக்கை அறிக்கையின் மீது அரசினால் பிறப்பிக்கப்படக்கூடிய பணிப்பாணைகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) அரசு, ஆண்டுக் கணக்குகளையும் தணிக்கை அறிக்கையையும் தன் கருத்துரைகளுடன் சேர்த்து இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

(4) நிதி அலுவலர், அடுத்து வருகின்ற ஆண்டிற்கான ஆண்டு நிதிசார் மதிப்பீடுகளை, நிலைமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய தேதிக்கு முன்னர் தயாரித்தல் வேண்டும்.

(5) நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட ஆண்டுக் கணக்குகளும் ஆண்டு நிதிசார் மதிப்பீடுகளும் நிதிக் குழுவின் கருத்துரைகளுடன் சேர்த்து, குழுமத்தின் முன்பு, அதன் ஆண்டுக் கூட்டத்தில் ஒப்புதலளிப்பிற்காக வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் குழுமம், அது குறித்த தீர்மானத்தை நிறைவேற்றி அதனை நிதி அலுவலருக்குத் தெரிவிக்கலாம்; அவரும் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## அத்தியாயம் VII

### பணி நிபந்தனைகள்

ஓய்வூதியம், பணிக்கொடை முதலானவை.

**35.** (1) இப்பல்கலைக்கழகம் தன் அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்ற பணியாளர்கள் ஆகியோரின் நலனுக்காக, வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும், தான் பொருத்தமெனக் கருதக்கூடிய ஓய்வூதியம், பணிக்கொடை, காப்பீடு, வருங்காலவைப்பு நிதியம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் வேண்டும்.

(2) இப்பல்கலைக்கழகம், (1)—ஆம் உட்பிரிவின்படி வருங்காலவைப்பு நிதியமொன்றை அவ்வாறு ஏற்படுத்தியுள்ளவிடத்து, இப்பல்கலைக்கழகம் ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பாகவும் அந்நிதியம் ஓர் அரசு வருங்கால வைப்பு நிதியாகவும் இருந்தாற்போன்றே 1925—ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதியங்கள் சட்டத்தின் வகைமுறைகள் அந்நிதியத்திற்குப் பொருந்துதல் வேண்டும் என்று அரசு விளம்பலாம். மையச் சட்டம் XIX/1925.

(3) இப்பல்கலைக்கழகம், நிதிக் குழுவுடன் கலந்தறிந்து, தான் தீர்மானிக்கக்கூடிய முறையில் வருங்கால வைப்பு நிதியத்தொகையை முதலீடு செய்யலாம்.

**விளக்கம்.—**இந்த பிரிவின் மற்றும் 36, 39 ஆகிய பிரிவுகளின் நோக்கங்களுக்காக, "அலுவலர்" என்னும் சொல், இப்பல்கலைக்கழகத்தின் வேந்தரையும் இணைவேந்தரையும் துணை வேந்தரையும் உள்ளடக்குதலாகாது.

பணி நிபந்தனைகள்.

**36.** இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்ற பணியாளர்கள் ஆகியோரின் நியமனம், அவர்களைத் தெரிவு செய்வதற்கான நடைமுறை, அவர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள் மற்றும் பிற பணி நிபந்தனைகள் ஆகியவை, வகுத்துரைக்கப்படக்கூடியவையாக இருக்கும்.

## அத்தியாயம் VIII

### நிலைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள்

நிலைமுறை விதிகள்.

**37.** இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, நிலைமுறை விதிகள் பின்வரும் பொருள்கள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அதாவது:—

(a) எந்த நிபந்தனைகளின்படி இப்பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி நடத்தப்படலாம் என்பதற்கு;

(b) எந்த முறையிலும், எந்த நிபந்தனைகளின்படியும் மதிப்புறு பட்டங்களும் பிற கல்விச்சிறப்புகளும் வழங்கப்படலாம் என்பதற்கு;

(c) கட்டணங்களும் பிற விதிப்புக் கட்டணங்களும் இவ்வளவென்று நிர்ணயித்தல், அவற்றைச் செலுத்துதல், பெறுதல் ஆகியவற்றிற்கு;

(d) இப்பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான கல்வித் தகுதியையும் தரத்தையும் வகுத்துரைப்பதற்கு;

(e) எந்த வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, பதிவாளர் நியமிக்கப்படலாம் என்பதற்கும், அவருடைய அதிகாரங்கள் மற்றும், கடமைகள் ஆகியவை இன்னவையென்பதற்கும்;

(f) எந்த வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, நிதி அலுவலர் நியமிக்கப்படலாம் என்பதற்கும்;

(g) எந்த வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, முதன்மையர்கள் நியமிக்கப்படலாம் என்பதற்கும், அவர்தம் அதிகாரங்களும் கடமைகளும் இன்னவையென்பதற்கும்;

(h) எந்த வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, ஆராய்ச்சி இயக்குநரும் மற்றும் விரிவாக்கக் கல்வி இயக்குநரும் நியமிக்கப்படலாம் என்பதற்கும், அவர்களுடைய அதிகாரங்கள், கடமைகள் ஆகியவை இன்னவையென்பதற்கும்;

(i) குழுமத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய நாட்படிகள் மற்றும் பயணப்படிகளுக்கு;

(j) புலம் ஒவ்வொன்றுக்குமான பாடப்பொருள்கள் குறித்தொதுக்கப்படுவதற்கு;

(k) புலங்கள் ஒவ்வொன்றின் பாடகுழுக்களின் அமைப்பிற்கும் அலுவல்களுக்கும்;

(l) புலங்களின் அமைப்பிற்கும் அலுவல்களுக்கும்;

(m) எந்த முறையில் முதன்மையர்கள் நியமிக்கப்படலாம் என்பதற்கு;

(n) கல்லூரிகளையும், கல்வி நிலையங்களையும் இணைப்பதற்கு;

(o) இப்பல்கலைக்கழகத்து நிதியங்களும் பணங்களும் ஏற்படுத்தப்படுவதற்கும் நிர்வகிக்கப்படுவதற்கும்;

(p) தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் எந்த முறையில் வெளியிடப்படவேண்டும் என்பதற்கு;

(q) 41–ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் கல்லூரிகளின் மாணவர்களுக்காக எவ்வளவு கால அளவிற்கும் எந்த முறையிலும் பயிற்றுவித்தல், கல்வி கற்பித்தல், பயிற்சியளித்தல் வேண்டும் மற்றும் தேர்வுகள் நடத்தப்படுதல் வேண்டும் என்பதற்கு; மற்றும்

(r) நிலைமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட வேண்டுமென்றோ வகுத்துரைக்கப்படக்கூடுமென்றோ கோரப்படும் பிற பொருட்பாடு எதற்கும் வகை செய்யலாம்.

நிலைமுறை விதிகள் எவ்வாறு செய்யப் படுகின்றன என்பது.

**38.** (1) குழுமம், இந்தப் பிரிவில் இதன்பின்பு வகைசெய்யப்பட்டுள்ள முறையில் அவ்வப்போது, நிலைமுறை விதிகளைச் செய்யலாம்; மற்றும் அந்நிலைமுறை விதிகளைத் திருத்தலாம் அல்லது நீக்கலாம்.

(2) கல்வி மன்றம், குழுமத்தால் நிறைவேற்றப்படவேண்டிய நிலைமுறை விதி எதனின் வரைவையும், குழுமத்திடம் முன்மொழியலாம்; மற்றும் அத்தகைய வரைவானது, குழமத்தால் அதன் அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், கல்விமன்றம், பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் தகுநிலை, அதிகாரங்கள் அல்லது அமைப்பினைப் பாதிக்கிற நிலைமுறை விதி எதனையும் திருத்தம் செய்கிற கருத்துரு எதனையும், அந்தக் கருத்துரு தொடர்பாக தனது கருத்தை வெளிப்படுத்துவதற்கு அந்த அதிகார அமைப்பிற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படும் வரையில், முன்மொழிதல் ஆகாது; மற்றும் அவ்வாறு வெளியிடப்படும் கருத்து எதுவும், குழமத்தால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(3) குழுமம், (2)–ஆம் உட்பிரிவின்படி, கல்விமன்றத்தால் முன்மொழியப்பட்ட வரைவைப் பரிசீலனை செய்யலாம் மற்றும் அது அந்த நிலைமுறை விதியின் வரைவினை நிறைவேற்றலாம் அல்லது மறுத்துத் தள்ளிவிடலாம், அல்லது திருத்தத்துடனோ இல்லாமலோ அதை மறுபரிசீலனைக்காகக் கல்வி மன்றத்திற்குத் திருப்பியனுப்பலாம்.

(4) (a) குழுமத்தின் உறுப்பினர் எவரும், நிலைமுறை விதியொன்றின் வரைவொன்றினைக் குழுமத்திற்கு முன்மொழியலாம்; மற்றும் குழுமம் அவ்வரைவை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது அது கல்வி மன்றத்தின் உள்ளிட்டெல்லைக்குள் வராத பொருட்பாடு ஒன்றைப் பற்றியதாக இருக்குமானால், அதை மறுத்துத் தள்ளிவிடலாம்.

(b) அத்தகைய வரைவு, கல்விமன்றத்தின் உள்ளீட்டெல்லைகுக்குள் வருகின்ற பொருட்பாடு ஒன்றைப் பற்றியதாக இருக்கின்ற நேர்வில், பரிசீலனை செய்வதற்காக அதைக் குழுமம் கல்விமன்றத்தின் பரிசீலனைக்குக் குறிப்பிட்டனுப்புதல் வேண்டும். அம்மன்றம் (2)—ஆம் உட்பிரிவின் வரம்புரையில் விதிக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றியத்திற்குப் பின்னர், அவ்வரைவிற்குத் தான் ஒப்புதலளிக்கவில்லையென்று குழுமத்திற்கு அறிக்கை கொடுக்கலாம், அல்லது கல்வி மன்றம் ஒப்புதல் அளிக்கக்கூடிய வடிவில் குழமத்திற்கு அவ்வரைவைப் பணிந்தனுப்பலாம். மேலும், அக்குழுமம் அவ்வரைவைத் திருத்தத்துடனோ இல்லாமலோ நிறைவேற்றலாம் அல்லது மறுத்து தள்ளிவிடலாம்.

ஒழுங்குமுறை விதிகள்.

**39.** (1) இந்த அவசரச் சட்டத்தின் மற்றும் நிலைமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் ஏதொன்றுக்குமோ வகை செய்வதற்கான ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம் அதாவது:—

(a) இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள், ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோரின் நலனுக்காக எந்த முறையிலும் எந்த நிபந்தகளுக்கு உட்பட்டும் ஓய்வூதியம், பணிக்கொடை, காப்பீடு, வருங்கால வைப்பு நிதியம் ஆகியவற்றை ஏற்படுத்தலாம் என்பதற்கும்;

(b) இப்பல்கலைக்ககழகத்தின் அலுவலர்கள், ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோரின் நியமனம், அவர்களைத் தெரிவு செய்வதற்கான நடைமுறை, அவர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், பணி குறித்த பிற நிபந்தனைகள் ஆகியவற்றிற்கும்;

(c) இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர்களுக்கும் அறிவிப்புக் கொடுத்தல், கூட்டத் தேதிகள், அக்கூட்டங்களில் நடத்தப்படவேண்டிய அலுவல்கள், அக்கூட்ட நடவடிக்கைகளில் பதிவுருவொன்றை வைத்துவருதல் ஆகியவற்றிற்கும்;

(d) கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைக்கும், குறைவெண்வரம்பு அமைவதற்குத் தேவைப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதற்கும்; மற்றும்

(e) ஒழுங்குமுறைவிதிகளால் வகுத்துரைக்கப்பட வேண்டுமென்றோ வகுத்துரைக்கப்படக்கூடுமென்றோ கோரப்படும் பிற பொருட்பாடு எதற்கும் வகைசெய்யலாம்.

(2) கல்வி மன்றம் நிலைமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, குறித்தகாலப் பாடப்பிரிவுகள், தேர்வுமுறைகள் ஆகியவை குறித்தும் இப்பபல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச்சிறப்புகள் ஆகியவை குறித்துமான வரைவுகளைத் தொடர்புடைய பாடக் குழுமங்களிடமிருந்து பெற்றதற்குப் பின்னர், அவற்றிற்கு வகைசெய்கின்ற ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம்.

(3) குழுமம், ஒழுங்குமுறை விதி எதனையும் திருத்துவதற்காக தொடர்புடைய அதிகார அமைப்பிற்கு, தான் பொருத்தமென நினைக்கும் பணிப்பாணைகளைப் பிறப்பிக்கலாம்.

## அத்தியாயம்–IX.

## கல்லூரிகள், பணியாளர்கள், நிதியங்கள் ஆகியவற்றை மாற்றுதல்

தமிழ்நாடு சட்டம் 8/1971.

குறித்த சில கல்லூரி களையும் கல்வி நிலையங் களையும் இப்பல்கலைக் கழகத்திற்கு மாற்றுதல்.

**40.**(1) 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்திலோ அதன்கீழ்ச் செய்யப்பட்ட நிலைமுறை விதிகள், ஒழுங்குமுறை விதிகள், பிற ஆணைகள் ஆகியவற்றிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், குறிக்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும் அந்ததேதிக்கு அடுத்துமுன்பு வரையில் நேரிணையான பல்கலைக்கழகத்தின் மூலக்கல்லூரிகளாகவும், கல்வி நிலையங்களாகவும் இருந்து வந்த கோயம்புத்தூரிலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பெரியகுளத்திலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இணைப்புபட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்வி நிலையங்களும், இப்பல்கலைக்கழகத்தின் மூலக்கல்லூரிகளாகவும், கல்வி நிலையங்களாகவும் இப்பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டு அதனால் பேணிவரப்படுதல் வேண்டும்.

(2) குறிக்கப்பட்ட தேதியன்றும் அதுமுதற்கொண்டும், (1)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரிகளின் மற்றும் கல்வி நிலையங்களின் கட்டுப்பாடும் நிருவாகமும், மற்றும் அவை தொடர்பான நேரிணையான பல்கலைக்கழகத்தின் மற்றும் அரசின் சொத்துக்கள், உடைமைகள், கடப்பாடுகள் ஆகியவை அனைத்தும், இப்பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டவையாக அதனிடம் மேவிநிற்றல் வேண்டும்.

(3) அரசு குறிக்கப்பட்ட தேதிக்குப்பின்னர், எந்தச் சமயத்திலும், தான் பொருத்தமெனக் கருதுகின்ற வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், இப்பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டிற்கென தனது நிலங்களில் எதனையும் அதனிடம் மாற்றலாம்.

(4) அரசு, குறிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர், எந்தச் சமயத்திலும், தான் பொருத்தமெனக் கருதுகின்ற வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், தனது கல்லூரிகளில் அல்லது கல்வி நிலையங்களில் ஏதொன்றின் கட்டுப்பாட்டையும் நிருவாகத்தையும் இப்பல்கலைக்கழகத்திடம் மாற்றலாம்.

(5) இம்மாநிலத்தில் பல்கலைக்கழகமொன்று நிறுவப்படுவது தொடர்பான பிற சட்டம் எதிலுமோ அதன்கீழ்ச் செய்யப்பட்ட நிலைமுறை விதிகள், துணைமுறைவிதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆணைகள் ஆகியவற்றிலோ என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசினால் குறித்துரைக்கப்படும் தேதியன்றும் அது முதற்கொண்டும், (4)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரிகளோ கல்வி நிலையங்களோ, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முந்திய தேதிவரையில் அவை எந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றிருந்தனவோ அந்தப் பல்கலைகழகத்தின் இணைப்பிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றுள்ள கல்லூரிகளாகவோ, கல்வி நிலையங்களாகவோ இருப்பனவாகக் கருதப்படுதலும் வேண்டும்; மேலும், இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகள் எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்கு, அதன்படியே பொருந்துதல் வேண்டும்.

மாணவர் களுக்குக்கான தனி வகைமுறைகள்.

**41.** இந்த அவசரச் சட்டத்திலோ, நிலைமுறை விதிகளிலோ, ஒழுங்குமுறை விதிகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், குறிக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னர், நேரிணையான பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதிலும் படித்துக் கொண்டிருந்த அல்லது அந்த நேரிணையான பல்கலைக்கழகத்தின் தேர்வு எதற்கும் அனுமதிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராயிருந்த 40–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரி ஒன்றின் மாணவர் ஒவ்வொருவரும் தம் குறித்தகாலப் படிப்புப் பிரிவை அவர் படித்துமுடிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும், அல்லது இப்பல்கலைக்கழகத்தின் தேர்வுக்கு ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இப்பல்கலைக்கழகம்,—

(a) நேரிணையான பல்கலைக்கழகத்தில் உள்ள குறித்தகாலப் படிப்புப் பிரிவிற்கிணங்கிய வகையில் முதல் துணைவேந்தரால் தீர்மானிக்கப்படும் அத்தகைய கால அளவுக்கும், அத்தகைய முறையிலும் அத்தகைய மாணவருக்காக, பயிற்றுவித்தல், கற்பித்தல், பயற்சி அளித்தல், தேர்வு நடத்தப்படுதல் ஆகியவற்றிற்கும்,

(b) அத்தகைய தேர்வில் முடிவாகத் தகுதிபெற்ற மாணவருக்கு, அதற்கு இணையான இப்பல்கலைக்கழகத்தின் பட்டம், பட்டயம் அல்லது பிற கல்வி சிறப்பு வழங்கப்படுவதற்குமான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

குறித்த சில பணியாளர்களின் பணியை மாற்றுதல்.

**42.** (1) குறிக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னர் தோட்டக்கலைத் துறையில் தகுதி பெற்றுள்ள நேரிணையான பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பணியாளர் ஒவ்வொருவரும் மேற்சொன்ன தேதியிலிருந்து இப்பல்கலைக்கழகத்தின் பணியாளர் ஒருவராக ஆதல் வேண்டும்; மற்றும் நேரிணையான பல்கலைக்கழகத்தின் பணியாளர் ஒருவராக இருப்பது அற்றுபோதல் வேண்டும்.

(2) (1)—ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவர்கள் அல்லாத, நேரினையான பல்கலைக்கழகத்தில் பிறபணியாளர் ஒவ்வருவரும் குறிக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னர், இந்த அவசரச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து ஒரு திங்கள் கால அளவுகுள்ளாக, நேரிணையான பல்கலைக்கழகத்தில் பணியாற்றுவதற்கோ அல்லது அத்தகைய தேதியிலிருந்து, அவரால் குறித்துரைக்கப்படக் கூடியதான ஒரு முன்தேதியிலிருந்தோ, அல்லது பின்தேதியிலிருந்தோ இப்பலைக்கழகத்திற்கு குறித்தொதுக்கப்படுவதற்கோவான தனது தெரிவினைச் செய்தல் வேண்டும்; மற்றும் ஒரு முறை செய்யப்பட்ட தேர்வு அறுதியானதாகும்.

(3) (2)—ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு திங்கள் என்பதான கால அளவு முடிவுற்றதன் பின்னர், அரசு ஆணை வாயிலாக, இனி வரும் தேதியிலிருந்தோ அல்லது முன் தேதியிலிருந்தோ செயல் விளைவு கொள்ளும் வகையில், அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நேரிணையான பல்கலைக்கழகப் பணியாளர்கள் அத்தகைய தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் ஆணையில் குறித்துரைக்கப்படக்கூடிய பணியூதியத்திலும் ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் பிற பொருட்பாடுகள் குறித்த உரிமைகளின் மற்றும் சிறப்புரிமைகளின் பேரிலும், இப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றுவதற்கென குறித்தொக்கப்பட்டு இருப்பர் என்று பணிக்கலாம்.

(4) (1)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் ஒவ்வொரும், இந்த அவசரச் சட்டம் நிறைவேற்றப்பட்டிராமலிருந்தால் குறிக்கப்பட்ட தேதியன்றோ அல்லது நேர்விற்கேற்ப ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்றோ அல்லது நேர்விற்கேற்ப ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்றோ, அவர் வகித்திருந்திருக்கக்கூடிய பதவிக் கால அளவைப் போன்ற அதே பதவிக்கால அளவிற்கும், பெற்றிருந்திருக்கக்கூடிய ஊதியத்தை போன்ற அதே ஊதியத்திற்கும், ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை ஏதேனுமிருப்பின் அதுகுறித்தும் பிற பொருள்கள் குறித்தும் அதே உரிமைகளுடனும், சிறப்புரிமைகளுடனும் இப்பல்கலைக்கழகத்தின் கீழ்பதவி வகித்து வருவார்.

(5) (1)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களுக்கு ஓய்வூதியத்தையும் பணிக்கொடையையும் கொடுப்பதற்கான கடப்பாடானது பல்கலைக்கழகத்தின் கடப்பாடாக இருத்தல் வேண்டும்.

(6) (3)—ஆம் உட்பிரிவின்படி ஆணையில் குறித்துரைக்கப்பட்ட பணியாளர்களுக்கு ஓய்வூதியத்தையும் பணிக் கொடையையும் செலுத்துவதற்கான கடப்பாடனது, இப்பல்கலைக்கழகத்தின் கடப்பாடாக இருக்கும்.

வருங்கால வைப்பு நிதியத்திலும் மற்றும் அதுபோன்ற நிதியங்களிலும் சேர்ந்துள்ள தொகைகளை மாற்றுதல்.

**43.** (1) குறிக்கப்பட்ட தேதியன்று 42—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியக் கணக்குகளில் வரவிலுள்ள தொகைகள், இப்பல்கலைக்கழகத்திடம் மாற்றப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன வருங்காலவைப்பு நிதியக் கணக்குகளைப் பொறுத்த கடப்பாடானது, இப்பல்கலைக்கழகத்தின் கடப்பாடாக இருத்தல் வேண்டும்.

(2) 42—ஆம் பிரிவின் (3)—ஆம் உட்பிரிவின்படியான ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று, அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகைகள், பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும். மற்றும் மேற்சொன்ன வருங்கால வைப்பு நிதியக் கணக்குகளைப் பொறுத்த கடப்பாடானது, பல்கலைக்கழகத்தின் கடப்பாடாக இருக்கும்.

(3) 42–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களின் சார்பாகவும் 42–ஆம் •பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படியான ஆணையில் குறித்துரைக்கப்பட்ட பணியாளர்களின் சார்பாகவும் முதிர்வு ஒய்வூதிய நிதியத்திலோ அல்லது அதைப் போன்ற பிற நிதியங்கள் எவையேனுமிருப்பின் அவற்றிலோ வரவு வைக்கப்பட்டுள்ள அத்தகைய தொகைகள் நேரிணையான பல்கலைக்கழகத்தின் அல்லது நேர்வுக்கேற்ப அரசின் பணி முதிர்வு ஒய்வூதியத்திலும் அதைப் போன்ற பிற நிதியங்கள் எவையேனுமிருப்பின், அவற்றிலும் சேர்ந்துள்ள தொகைகளிலிருந்தும் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட தொகைகள் பணியாளர்களின் நலனுக்காக பல்கலைக்கழகத்தால் நிறுவப்படக்கூடிய பணிமுதிர்வு ஒய்வூதிய நிதியத்தின் அல்லது அதை போன்ற நிதியங்கள் எவையேனுமிருப்பின் அவற்றின் பகுதியாக அமைதல் வேண்டும்.

**பல்கலைக் கழகத்திற்கு குறித்த சில பணத் தொகைகள் வழங்கப்படுதல்.**

**44.** (1) நேரிணையான பல்கலைக்கழகத்துடன் கலந்தாய்வு செய்து, அரசு குறித்துரைக்கக்கூடிய தொகையை, நேரிணையான பல்கலைக்கழகம் குறிக்கப்பட்ட தேதியன்று இருக்கின்றவாறான தனது நிதியங்களிலிருந்து, இப்பல்கலைக்கழகத்திடம் வழங்குதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி வழங்கப்படத்தக்க தொகையானது, 43–ஆம் பிரிவின்படி மாற்றப்பட்டுள்ள தொகைக்குக் கூடுதலாக அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

**புதிய கல்லூரியானது மூலாதார அல்லது இணைக்கப்பட்ட கல்லூரியாக இருத்தல்.**

**45.** குறிக்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், தோட்டக்கலை மற்றும் அதனோடு தொடர்புடைய அறிவியல்களில் கல்வியை கற்பிக்கிற புதிய கல்லூரி எதுவும், பல்கலைக்கழகத்தின் மூலாதாரா அல்லது இணைக்கப்பட்ட ஒரு கல்லூரி என்பதாகத் தவிர நிறுவப்படுதலாகாது.

## அத்தியாயம்–X.

## இடைப்படுகால வகைமுறைகள்

**முதல் துணை வேந்தரின் நியமனம்.**

**46.** 11–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு திங்களுக்குள்ளாக, அரசினால் அது நிர்ணயிக்கும் சம்பளத்தின் பேரிலும், மூன்றாண்டிற்கு மேற்படாததொரு கால அளவிற்கும், மற்றும் அது பொருத்தமெனக் கருதும் பிற நிபந்தனைகளின்பேரிலும், முதல் துணை வேந்தர் நியமிக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், முதல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள நபர், தமது பதவிக்கலாத்தின்போது, அறுபத்தைந்து வயதினை அவர் நிறைவெய்துவாரானால், பதவியிலிருந்து ஒய்வு பெறுதல் வேண்டும்.

**முதல் பதிவாளரின் நியமனம்.**

**47.** 13–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், குறிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள்ளாக, அரசினால், அது நிர்ணயிக்கும் சம்பளத்தின்பேரிலும், மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கும், மற்றும் அது பொருத்தமெனக் கருதும் பிற நிபந்தனைகளின் பேரிலும், முதல் பதிவாளர் நியமிக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், முதல் பதிவாளராக நியமிக்கப்பட்ட நபர், அவர் கல்வியாளராக இருக்கும் நேர்வில், தமது பதவிக்காலத்தின்போது அறுபது வயதினை அவர் நிறைவெய்துவாரானால், பதவியிலிருந்து ஒய்வுபெறுதல் வேண்டும். அவர் கல்வியாளர் அல்லாத பிற நபராக இருக்கும் நேர்வில், ஐம்பத்தெட்டு வயதினை நிறைவெய்துவாரானால் பதிவியிலிருந்து ஒய்வு பெறுதல் வேண்டும்.

முதல் துணை வேந்தரின் இடைப்படுகால அதிகாரங்கள்.

**48.** (1) முதல் துணைவேந்தரின் நியமனத் தேதியிலிருந்து ஆறு திங்களுள்ளாகவோ அல்லது அரசு அறிவிக்கையின் மூலம் குறித்துரைக்கும் ஓராண்டிற்கு மேற்படாத மேலுமான கால அளவுக்குள்ளாகவோ, நிருவாகக் குழுமத்தையும் கல்வி மன்றத்தையும், 18–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள இப்பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புகளையும் அமைத்துருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது முதல் துணைவேந்தரின் கடமையாகும்.

(2) வேந்தரின் ஒப்புதலளிப்புடன், தேவையானவையாயிருக்கும் நிலை முறை விதிகளையும், ஒழுங்குமுறை விதிகளையும் செய்வதும் அவற்றை நிறைவேற்றி முடிப்பதற்காக அவை குறித்து நடவடிக்கை எடுப்பதற்குத் தகுதிவாய்ந்த அந்தந்த அதிகார அமைப்புகளிடம் அவற்றை அனுப்பி வைப்பதும் முதல் துணைவேந்தரின் கடமையாகும். அத்தகைய நிலைமுறைவிதிகளும் ஒழுங்குமுறை விதிகளும், உருவாக்கப்பட்டதும் தமிழ்நாடு அரசிதழ் வெளியிடுதல் வேண்டும்.

(3) இந்த அவசரச் சட்டத்திலும் நிலைமுறைவிதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும் அதிகார அமைப்பொன்று உரியவாறு அமைத்துருவாக்கப்படுகின்ற காலம் வரையிலும், முதல் துணைவேந்தர் இந்த அவசரச் சட்டம், நிலைமுறைவிதிகள், ஒழங்குமுறைவிதிகள் ஆகிவற்றின்கீழ் அத்தகைய அதிகார அமைப்பிற்குள்ள அதிகாரங்களில் ஏதொன்றையும் செலுத்திவருவதற்கும் அலுவல்களில் ஏதொன்றையும் ஆற்றிவருவதற்குமெனத் தற்காலிகமாக அலுவலர் எவரையும் நியமிக்கலாம் அல்லது குழு எதனையும் அமைத்துருவாக்கலாம்.

## அத்தியாயம் XI.

### பல்வகை

ஆண்டு அறிக்கை.

**49.** (1) இப்பல்கலைக்கழகத்தின் ஆண்டு அறிக்கை துணைவேந்தரின் பணிப்புரையின்படி தயாரிக்கப்படுவதோடு, அது பரிசீலனை செய்யப்படவேண்டியுள்ள ஆண்டுக் கூட்டத்திற்குக் குறைந்தது ஒரு திங்களுக்கு முன்னர், குழுமத்திடம் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) குழுமம், ஆண்டு அறிக்கையைப் பரிசீலனை செய்தபின்னர், அதன் படியொன்றை அரசுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) ஆண்டு அறிக்கையின் படியொன்றைப் பெற்றுக்கொண்டவுடன் அரசு, அத்தகைய அறிக்கையின் படியொன்றை அதன் மீதான தனது குறிப்புரைகளுடன் சேர்த்து இம்மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்குதல்.

**50.** (1) இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் எவரேனும், குழுமத்தின் கருத்தின்படி, ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கியதாகவுள்ள ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றவழக்கு நீதிமன்றமொன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பாராயின் அல்லது கடுந்தவறான நடத்தைக் குற்றம் இழைத்த குற்றவாளியாக இருப்பாராயின், குழுமத்தின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினராலும் கூட்டத்திற்கு வருகைதந்து வாக்களிக்கும் குழும உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறைந்ததல்லாத பெரும்பான்மையினராலும் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலமாக, இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் இதன்பொருட்டு பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணை ஒன்றின் மூலம், அத்தகைய நபரை குழுமம் நீக்கம் செய்யலாம்; மற்றும் இப்பல்கலைக்கழகத்தால் அந்த நபருக்கு அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட பட்டம் அல்லது பட்டயம் அல்லது பிற கல்விச்சிறப்பு எதனையும், மேற்சொன்ன அதே காரணத்திற்காகக் குழுமம் விலக்கிக் கொள்ளலாம்.

(2) நபர் எவரேனும் மனச் சீர்கேடுற்றவராகவோ அல்லது ஒரு செவிட்டு

ஊமையராகவோ ஆகியிருக்கிறார், அல்லது நொடித்த ஒருவராக நீதித்தீர்ப்புப் பெறுவதற்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார், அல்லது நொடித்த ஒருவராக நீதித்தீர்ப்பு அளிக்கப்பெற்றிருக்கிறார் என்கின்ற காரணத்தினாலும்கூட, இதன்பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணையொன்றின் மூலம், குழுமமானது, இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் அவரை நீக்கஞ்செய்யலாம்.

(3) எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு அவருக்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, இந்தப் பிரிவின்படி நபரொருவருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதலாகாது.

(4) (1)–ஆம் உட்பிரிவின்படி அல்லது நேர்விற்கேற்ப (2)–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றின் படியொன்று, அது அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் வகுத்துரைக்கப்பட்ட முறையில், தொடர்புடைய நபருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

தற்செயல் காலியிடத்தை நிரப்புதல்.

**51.** இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் (பதவி–வழி) உறுப்பினர்களல்லாத பிற) உறுப்பினர்களுக்கிடையே எழும் தற்செயல் காலியிடங்கள் அனைத்தும் எந்த உறுப்பினருடைய பதவியிடம் காலியாக ஆகியுள்ளதோ அந்த உறுப்பினரைப் பெயர் குறித்துநியமனம் செய்த அல்லது தேர்ந்தெடுத்த நபரைக் கொண்டோ அமைப்பினைக் கொண்டோ எவ்வளவு விரைவில் கூடுமோ அவ்வளவு விரைவில் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் தற்செயல் காலியிடமொன்றுக்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் எவருடைய இடத்தை அவர் நிரப்புகிறாரோ அவர் ஓர் உறுப்பினராக இருந்திருக்கக்கூடிய கால அளவில் எஞ்சிய பகுதிக்கு அத்தகைய அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பின் உறுப்பினராக இருந்துவருதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினரின் பதவிக் கால அளவு முடிவடையும் தேதிக்கு முந்திய ஆறு திங்களுக்குள்ளாக அத்தகைய தற்செயல் காலியிடம் ஏற்படுமாயின் அத்தகைய காலியிடம் ஏதுவும் நிரப்படுதலாகாது.

செயல்களையும் நடவடிக்கைகளையும் செல்லத்தக்கனவாக்குதல்.

**52.** இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு ஏதொன்றின் அல்லது பிற குழுமம் ஏதொன்றின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு ஏதொன்றிலும் அல்லது பிற அமைப்பு ஏதொன்றிலும் காலியிடம் ஏதேனும் உள்ளது, அல்லது அதன் உறுப்பினரொருவரை நியமனஞ்செய்ததில் குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் நேர்ந்துள்ளது, அல்லது நேர்வின் தகுதிகளைப் பாதிக்காத வகையில், அத்தகைய செயல் அல்லது நடவடிக்கை எதிலும் குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் நேர்ந்துள்ளது என்கிற காரணத்தைக்கொண்டு மட்டுமோ, அல்லது ஒவ்வொரு மூன்று திங்களுக்கும் ஒருமுறை குழுமம் கூடவில்லை என்கிற காரணத்தைக் கொண்டு மட்டுமோ, செல்லாததாக ஆக்கப்படுதலாகாது.

உரிமை வழக்குகளும், சட்ட நடவடிக்கைகளும்.

**53.** பல்கலைக்கழகத்தினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்படும் உரிமை வழக்குகள் மற்றும் பிற சட்ட நடவடிக்கைகள் அனைத்திலும், வாதுரைகள், பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு சரிபார்க்கப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய உரிமை வழக்குகளிலும் நடவடிக்கைகளிலும், நீதி மன்றக் கட்டளைகள் அனைத்தும் பிறப்பிக்கப்பட்டு பதிவாளருக்குச் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

துணை வேந்தர் மற்றும் பிற அலுவலர்கள் முதலானோர் பொது ஊழியர்களாகக் கருதப்படுவர் என்பது.

மையச் சட்டம் XLV/1860.

**54.** துணைவேந்தர், பதிவாளர், நிதி அலுவலர், முதன்மையர்கள், இயக்குநர்கள், மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் பிற பணியாளர்கள் ஆகியோர், இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளில் ஏதொன்றையுமொட்டிச் செயற்படுகின்றபோதோ அல்லது செயற்படுவதாகப் புலப்படுகின்றபோதோ, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21–ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியர்களாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இணைப்புப் பட்டியலைத் திருத்துவதற்கான அதிகாரம்.

**55.** அரசு, அறிவிக்கையின் மூலம், இணைப்புப்பட்டியலை மாற்றியமைக்கலாம், திருத்தியமைக்கலாம், அல்லது அதில் கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதனையும் சேர்க்கலாம், அல்லது அந்த இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதனையும் நீக்கிவிடலாம்; மற்றும் அத்தகைய அறிவிக்கை வெளியிடப்பட்டதன்பேரில், அந்த இணைப்புப்பட்டியல் அதன்படியே திருத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**56.** (1) குறிக்கப்பட்ட தேதிக்கு அல்லது நேர்விற்கேற்ப அறிவிக்கை செய்யப்பட்ட தேதிக்குப் பின்பு இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதையேனும் முதன்முதலில் அமைத்துருவாக்குதல் குறித்தோ அல்லது மாற்றி அமைத்துருவாக்குதல் குறித்தோ, அல்லது மற்றப்படி இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துதல் குறித்தோ இடர்ப்பாடு ஏதேனும் எழுமாயின், அரசு அறிவிக்கையின் மூலமாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காகத் தேவையானதென்றோ உகந்ததென்றோ தனக்குத் தோன்றக்கூடிய அத்தகைய வகைமுறையை இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாததாக இல்லாதவகையில் செய்யலாம்:

**வரம்புரை:** ஆனால் அத்தகைய அறிவிக்கை எதுவும், குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்பு பிறப்பிக்கப்படுதலாகாது.

(2) (1)—ஆம் உட்பிரிவின்படியோ, இந்த அவசரச் சட்டத்தின் பிற வகைமுறைகள் எவற்றின்படியுமோ பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக, சட்டமன்றப்பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய அறிவிக்கை எதையேனும் சட்டமன்றப்பேரவையானது மாற்றியமைக்குமாயின் அல்லது அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படுதலாகாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின், அந்த அறிவிக்கையானது அதன்பின்பு அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறுதல் வேண்டும். நேர்விற்கேற்ப செயல்வடிவம் பெறாமல் போதல் வேண்டும்; அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது செயல்வடிவம் பெறாமல் போகச் செய்வதெதுவும், அந்த அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் பாதகமில்லாமல் இருத்தல் வேண்டும்.

8/1971 எனும் எண் கொண்ட தமிழ்நாடு சட்டம் பொருந்தாது என்பது.

**57.** (1) குறிக்கப்பட்ட தேதியன்றும், அதுமுதற்கொண்டும், (இதன் பின்பு இந்தப்பிரிவில் மேற்சொன்ன சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் வகைமுறைகள், இந்த அவசரச் சட்டம் பொருந்துவதாயுள்ளவையும் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப் பட்டுள்ளவையுமான கல்லூரிகளையும் கல்வி நிலையங்களையும் பொறுத்த அளவில், பொருந்துவது அற்றுப் போதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 8/1971

(2) அவ்வாறு அற்றுப் போவதானது,—

(a) மேற்சொன்ன சட்டம் முன்னர் நடைமுறையில் இருந்ததையோ; அல்லது

(b) மேற்சொன்ன சட்டத்திற்கெதிராகப் புரியப்பட்ட குற்றச் செயல் எதனையும் பொறுத்த அளவில் ஏற்க நேரிட்ட தண்டனைத்தொகை அல்லது இழப்புத் தண்டனை அல்லது தண்டனை எதனையுமோ; அல்லது

(c) அத்தகைய தண்டனைத் தொகை, இழப்புத் தண்டனை அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதையும் பாதித்தலாகாது; மற்றும் இந்த அவசரச் சட்டம் நிறைவேற்றப்படாதது போன்றே அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதுவும் தொடுக்கப்படலாம், தொடர்ந்து நடத்தப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்; மற்றும் அத்தகைய தண்டனைத்தொகை, இழப்புத்தண்டனை அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1)—ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மேற்சொன்ன சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்டவையும் குறிக்கப்பட்ட தேதியன்று செயல்வடிவம் பெற்றுள்ளவையுமான நிலைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அனைத்தும், இந்த அவசரச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்படும் நிலைமுறை விதிகளாலும் ஒழுங்குமுறை விதிகளாலும் அவை அறவு செய்யப்படுகின்றவரையிலும், இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளுடன் அவை எந்த அளவுக்கு ஒவ்வாதனவாக இல்லாதிருக்கின்றனவோ அந்த அளவுக்குத் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

பணிப்புரைகள் வழங்க அரசுக்கு உள்ள அதிகாரம்.

**58.** அரசானது, அவ்வப்போது இந்த அவசரச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, தான் தக்கதெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரைகளை பல்கலைக்கழகத்திற்கு பிறப்பிக்கலாம்; மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது பல்கலைக்கழகத்தின் கடமையாகும்.

## இணைப்புப் பட்டியல்.

**[(1 (3) மற்றும் 55 ஆகிய பிரிவுகளை காணவும்)]**

(1) கோயம்புத்தூரிலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்.

(2) கோயம்புத்தூரிலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்குள் அமைந்துள்ள ஆராய்ச்சி மற்றும் கல்விப் பிரிவுகள் அனைத்தும்.

(3) பெரிய குளத்திலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்.

(4) பெரிய குளத்திலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்குள் அமைந்துள்ள ஆராய்ச்சி மற்றும் கல்விப் பிரிவுகள் அனைத்தும்.

(5) தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு.

(6) தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஊட்டி.

(7) தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல்.

(8) தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை.

(9) தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை.

(10) காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர்.

(11) மலர் ஆராய்ச்சி நிலையம், தோவாளை.

(12) தேங்காய் ஆராய்ச்சி நிலையம், வேப்பன்குளம்

(13) விருத்தாசலத்திலுள்ள மண்டல ஆராய்ச்சி நிலையத்திற்குள் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சிப் பிரிவுகள் அனைத்தும்.

(14) பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்குள் அமைந்துள்ள தோட்டக்கலை ஆராய்ச்சிப் பிரிவுகள் அனைத்தும்.

(15) தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், விஜயநகரம்.

2011–ஆம் ஆண்டு பிப்ரவரி,
திங்கள் 28–ஆம் நாள்.

**சுர்ஜித் சிங் பர்னாலா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

உடல் நலத்திற்கு வேண்டிய சத்துக்களை வழங்கிப் பாதுகாப்பதாலும், அதிக அளவில் வேலைவாய்ப்பு நல்குவதாலும் விரிந்து பரவி வரும் வேளாண் பதனிடு தொழிற்சாலைகளுக்கான மூலப்பொருட்களை வழங்கி வருவதாலும் தோட்டக்கலைப் பயிர்கள் மிக முக்கியத்துவம் பெற்று வருகின்றன. ஒப்பு நோக்கும்போது பிற மாநிலங்களைப் போல் இல்லாமல், குளிர்மண்டலம், மித வெப்ப மண்டலம், ஈரப்பதத்துடன் கூடிய வெப்ப மண்டலம், மித வறட்சி மற்றும் இதமான சூடுள்ள மண்டலம் என்பதாக பல்வேறு தட்பவெப்ப நிலைகளைக் கொண்டு தனித்துவம் வாய்ந்த வகையில் தமிழ்நாடு விளங்குவதால், இம்மாநிலத்தின் ஒன்று அல்லது பிற பகுதிகளில் அவற்றிற்குரிய தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்ய இயல்விக்கும் மாநிலமாக இது திகழ்கிறது.

2. தோட்டக்கலையில் நல்ல வளர்ச்சி ஏற்படுவதை உறுதிசெய்யவும், தோட்டக்கலை மற்றும் அது தொடர்பான அறிவியல்களில் அவை குறித்த கல்வி கற்பதை மேம்படுத்தவும் ஆய்வுகள் தொடரப்படுவதை அதிகப்படுத்தவும், தோட்டக்கலைக்கென தனிப்பட்டமுறையில் ஒரு பல்கலைக்கழகத்தை அமைப்பது தேவையெனக் கருதப்படுகிறது. மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 2011–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7–ஆம் நாள் சட்டமன்றத்தின் முதல் கூட்டத்தொடரில் உரையாற்றுகையில், மாநில அரசானது தோட்டக்கலைக்கென தனித்ததொரு பல்கலைக்கழகத்தைக் கிருஷ்ணகிரியில் அமைக்கும் என அறிவித்துள்ளார்; அப்பல்கலைக்கழகம் எதிர்காலத்தில் வேளாண்மைத் துறையில் சிறப்பானதொரு இடத்தைப்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

3. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.